விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 11 வெள்ளிக்கிழமை (24.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# சட்டத்துக்கு முரணாக அரசு செயற்படுகிறது

## வடக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு



இலங்கை அரசாங்கம் சட்டத்திற்கு புறம்பான வழியில் நடக்க முனைந்துள்ளது என பகிரங்கமாக குற்றம்சாட்டிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாம் விரித்த வலைக்குள் தானே அகப்பட்டுத் திண்டாடுகின்றார் எனவும் தெரிவித்துள்ளார். அத்தோடு இவ்வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சுவட்டத்தொடரில் சர்வதேச ரீதியாக கேள்விக்குட்படுத்தப்படப்போகும் இலங்கை அரசாங்கம் அடுத்த தேர்தலை மட்டும் மனதில் எடுத்து பிழையான வழியில் போய்க்கொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க...)

## லலித் வீரதுங்க அமெ. விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய உள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நல்லிணக்க முனைப்புக்கள் தொடர்பில் அமெரிக்கத் தலைவர்களுக்கும் ராஜதந்திரிகளுக்கும் விளக்கம் அளிக்கும் நோக்கில் அவர் இந்த

20ம் பக்கம் பார்க்க

## வட மாகாண சபை அமர்வுகளில் கமலேந்திரன் பங்கேற்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச சபை தலைவர் டானியல் றெக்ஷியன் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரனை வடமாகாண சபை அமர்வுகளில் கலந்துகொள்வதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் நேற்று வியாழக்கிழமை அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன், கமலேந்திரன், றெக்சியனின் மனைவி மற்றும் இந்தக் கொலையுடன் தொடர்புடைய ஜசிந்தன் என்ற இளைஞன் ஆகியோரை பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கமலேந்திரன் மற்றும் றெக்சியனின் மனைவி சார்பாக சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் மன்றில் ஆஜராகியிருந்தார்.

கமலேந்திரன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தனது

20ம் பக்கம் பார்க்க

## கிழக்கில் சில குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டது

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

யுத்தம் நடைபெற்ற காலங்களில் சில குழுக்களுக்கு நாங்கள் ஆயுதங்களை வழங்கியிருந்தோம். அதன் பின்னர் வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப் பெற்றதன் காரணமாக எங்களால் சமாதானத்தை நிலைநாட்ட முடிந்தது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஈஸ்ட் லகூல் ஹோட்டலில் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மதத்தலைவர்களை சந்தித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு

20ம் பக்கம் பார்க்க

## மேலும் ஒரு எலும்புக்கூடு நேற்று மீட்பு!

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள மனித புதைகுழி நேற்று மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் முன்னிலையில் 12-வது தடவையாக தோண்டப்பட்ட போது மேலும் ஒரு மனித எலும்புக்கூடு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் மற்றும் அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண ஆகியோர் முன்னிலையில் குறித்த புதைகுழி நேற்று காலை 8.30 மணி முதல் மாலை 2.30 மணிவரை தோண்டப்பட்டது.

மேலும் குறித்த மனித புதைகுழியில் உள்ள மனித எலும்புக்கூடுகள் சில அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண மற்றும் அவரது குழுவினரால் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு கொண்டு

20ம் பக்கம் பார்க்க

## ஓம் நமசிவாய பிரார்த்தனை மாபெரும் பவனி இன்று

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க வலியுறுத்தி சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று ஓம் நமசிவாய என்ற மந்திர ஒலிப்புடன் வாகனப் பவனி இடம் பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்களின தலைமையில் இடம் பெறும் ஓம் நமசிவாய பிரார்த்தனை பவனி இன்று முற்பகல்

20ம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை கோரும் பிரேரணை சமர்ப்பிக்க ஏற்பாடு

### வடக்கு மாகாண சபையில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசினால் தமிழ் மக்களிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையினை கோரும் பிரேரணையொன்று வடக்கு மாகாண சபையின் எதிர்வரும் அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இப்பிரேரணையினை மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் முன் மொழியவுள்ளார்.

மேலும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டவை இன அழிப்பு எனவும், உள்நாட்டு பொறிமுறை பிரயோசனை அற்றது என்பன உட்பட 3 பிரேரணைகள் குறித்த உறுப்பினரால் முன் மொழியப்படவுள்ளன.

உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினால் முன்மொழியப்படவுள்ள பிரேரணையாவன:

20ம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பை அழைத்து ஜனாதிபதி பேசுவார்!

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடருக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சந்தித்து கலந்துரையாடுவார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் தொலைபேசியில் சந்திப்பு தொடர்பாக உரையாடியதாக அரசாங்க தகவலகள் கூறின.

இனப் பிரச்சினை தீர்வுக்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகித்தால் மாத்திரமே தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்படும் என அரசாங்கம் கூறிய நிலையில் தற்போது ஜெனிவா மாநாட்டை முன்னிட்டு சந்திப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சர்வாதிகார நோக்கிலேயே இராணுவத்திற்கு அதிகாரம்

### மாவை எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களிடம் அதிகாரம இருக்கக்கூடாது என்ற சர்வாதிகார நோக்கிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இங்கு இராணுவத்தினருக்கு அதிகாரங்களை வழங்கியிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லை. இருந்ததும் பறித்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் மிஞ்சியிருந்ததையும் கொடுக்க மறுக்கின்ற நிலையே தற்போது வடக்கு மாகாணத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் பிரதேச

20ம் பக்கம் பார்க்க



போருக்கு தயாராகா விட்டால் புலிக்கொடி பறக்கும்

செய்திகள் பக்கம் 10



புதைகுழி விவகாரம் சி.ஐ.டியிடம்...!

செய்திகள் பக்கம் 17



ஒபாமா - போப் சந்திப்பு

செய்திகள் பக்கம் 14

கடற்றொழில் உபகரணம்



முல்லையில் சூறை

செய்திகள் பக்கம் 07

செத்தார் எலும்பும் எழப்பணிப்பான் திருக்கேதீச்சரத்தானே

ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17



இந்திய அணியில் மீண்டும் சேவாக்

விளையாட்டு பக்கம் 18

நடுவ நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று காலமானார்



(கொழும்பு)

முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று வியாழக்கிழமை மாலை கொழும்பில் காலமானார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரிகளில் கல்வி பயின்ற இவர், மேற்கிந்திய பார்படோஸ் பல்கலைக் கழகத்தில் சட்ட முதுமாணி (சட்ட வரைவு) பட்டம் பெற்றார்.

இந்நிலையில் இவர், 1979-ம் ஆண்டு உயர நீதிமன்ற சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். 2011-ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட முன்னர் இவர், ஏழு வருடங்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக கடமையாற்றியுள்ளார். (எ-11)

## ஓம் நமசிவாய பிரார்த்தனையை மகிமைப்படுத்துவோம்!

### சிவதொண்டர் அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களின் புனிதத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுக்கள் மற்றும் மத நிந்தனை செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் இன்று நடத்தவுள்ள ஓம் நமசிவாய ஆன்மீக பிரார்த்தனை வாகன பவனிக்கு சிவதொண்டர் அமைப்பு பூரண ஆதரவை வெளியிட்டுள்ளது. இந்த நிகழ்விற்கு சிவதொண்டர்கள் மற்றும் சிவமங்கையர்கள் உட்பட அனைத்து சிவனடியார்களையும் பக்திபூர்வமாக பங்குபற்றி சிவமூல மந்திரமாகிய ஓம் நமசிவாய மந்திரத்தை மகிமைப் படுத்துமாறும் மேற்படி அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் சிவதொண்டர் அமைப்பு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்.குடாநாடு உட்பட தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள ஆலயங்களில் அண்மைக் காலமாக மத நிந்தனை செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன. அத்துடன் இளைஞர், யுவதிகளிடம் ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகள் குறைந்து செல்கின்றன. இதனாலேயே அண்மைக் காலமாக இளையோரிடையே விரும்பத்தகாத சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

எனவே, இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழி இளைஞர், யுவதிகளிடையே ஆன்மகம் சார் செயற்பாடுகளை மேலோங்கச் செய்வதேயாகும்.

இதற்காக ஓம் நமசிவாய என்ற மந்திரத்தின் மகிமையை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். இதன் ஒரு அங்கமாக சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள ஓம் நமசிவாய ஆன்மீக வாகன பவனியை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகின்ற இந்த ஆன்மீக நிகழவிற்கு எமது அமைப்பு பூரண ஆதரவை வழங்குகின்ற அதேவேளை, இந்த நிகழ்வில் அனைத்து இந்துப் பெருமக்களையும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றது.

இந்தப் பவனி செல்கின்ற பாதைகளிலுள்ள சைவ வித்தியாசாலைகள், இந்து அமைப்புகள் மற்றும் வீடுகளுக்கு முன்பாக பூரண கும்பம் வைதது இதனை மகிமைப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம். (எ-11)

## வைத்தியசாலையில் போதைவஸ்து பாவனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் போதைவஸ்துப் பாவனை அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

போதைவஸ்து விற்பனை செய்வோர் அங்கு சிகிச்சை பெறுபவர்களை பராமரிப்பவர்களை இலக்கு வைத்து தமது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு இவ்வாறான விற்பனைகள் இடம் பெறுவதாகக் கூறப்பட்டது.

இதேவேளை யாழ்.போதனா வைத்திய சாலையின் புதிய கட்டிடத் தொகுதியில் கஞ்சாப் பாவனையில் ஈடுபட்ட இருவர் நேற்று வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

அவர்கள் இருவரும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன். ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (எ-4)

## இந்திய மீனவர்கள் நால்வர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து கடற்றொழிலுக்காக படகில் வந்த வேளை படகு விபத்துக்குள்ளான காரணத்தினால் யாழ்.நெடுந்தீவு கடற்கரையோரத்தில் கரையொதுங்கிய 4 மீனவர்களையும் விடுதலை செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த வருடம் 12 ஆம் மாதம் 5 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்ட இந்த மீனவர்கள் 4 பேரும் 51 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மேற்படி மீனவர்களின் வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது நீதவான் எஸ்.லெலின்குமார் இவ் உத்தரவை பிறப்பித்தார். (எ-6)


## ஆசிரியர் தேவை

எமது கல்லூரியில் தரம் 6 - 11 வரை விஞ்ஞான பாடம் கற்பிப்பதற்கும் தரம் 6 - 9 வரை சிங்களம் கற்பிப்பதற்கும் ஆசிரியர் தேவை. பொருத்தமானவர்கள் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

அதிபர்
கிளி/முருகானந்தா கல்லூரி,
முரசுமோட்டை. (சி-6308)

## Vacancy

யாழ் நகரில் இயங்கிவரும் கணனி நிறுவனத்திற்கு MS Office, DTP, Web Designing, Harware Technology, Internet & E-Mail, கற்பிக்கக் கூடிய ஆண்/பெண், கணனி விரிவுரையாளர்கள் தேவை.

Computer Typesetting, Designing, தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை குறைந்தது 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.

Contact : 021-2224459/ 0772533390

(சி-6313)

விளம்பரத் தொடர்புகளுக்கு: 0213210815,0215671532 valampurii@yahoo.com


# மரண அறிவித்தல்



## வைரமுத்து சண்முகம்

மிருசுவிலை பிறப்பிடமாகவும் குமரபுரம், பரந்தனை வாழ்விடமாகவும் கொண்ட வைரமுத்து சண்முகம் அவர்கள் 21.01.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் வைரமுத்து, அமரர் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் அமரர் சடாசிவம், அமரர் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், அமரர் பூரணம் அவர்களின் பாசமிகு கணவரும், திருமதி சிவகாமிப்பிள்ளை, அமரர் மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆனந்தர், அமரர் கார்த்திகேசு அவர்களின் அன்பு மைத்துனரும், அமரர் நாகேஸ்வரன் (நாகராசா), நகுலேஸ்வரி (சரசாலை), நாகேந்திரராணி (கனடா), நகுலேஸ்வரன் (ஜேர்மனி), நந்தினி (தேவி-குமரபுரம்), நந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாரதாதேவி (குமரபுரம்), கந்தசாமி (சரசாலை), கனகசபை (கனடா), மங்களசௌந்தரி (ஜேர்மனி), சோமசேகரம் (கரன்-அஞ்சலர் கண்டாவளை), சுகிர்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜன், வினுசியன், சுதர்சன், பிரபாகர், சுசித்திரா, அமரர் சகிலா, கவிதா, கஜந்தன், அமரர் கார்த்தீபன், யதுசன், நிவேதா, நிருஜா, நிரோஜி, தட்சணன், தரணியா, சுகாசன், சுபாகர், சாருஜா ஆகியோரின் அன்புப் பேரனும், நிருபன், லக்சா, டர்மியா, வியாசிக் ஆகியோரின் அன்பான பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.01.2014 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.89 குமரபுரம்,
பரந்தன்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-6316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வெள்ளி நாக்குப் பேச்சாளர்

ஒரு காலத்திலே இந்த உலகத்திலேயே தலை சிறந்த பேச்சாளர்கள் யார் என்று கேட்டாள் ஐந்து பேரை சொல்லுவார்களாம். "

அந்த ஐந்து பேரிலே ஒருவர் நம் ஊர்க்காரர் அது தெரியுமா? உங்களுக்கு!

யார் அந்த ஒருவர்?

அவர்தான் ரைட் ஆனரபிள் சில்வர்டங் சீனிவாச சாஸ்திரியார்...

வெள்ளி நாக்குப் பேச்சாளர்.

ஜெனீவாவிலே ஒருதரம் இவர் ஆங்கிலத்தில் உரையாற்றியுள்ளார்!

பால்ஃப்ஃளோர் பிரபு என்ற ஆங்கிலேயர் அந்தப் பேச்சைக் கேட்டார். அந்தப் பேச்சைக் கேட்டு வியப்பு அடைந்து விட்டார்.

அவர் என்ன கூறினார் தெரியுமா?

"எங்கள் ஆங்கிலமொழி இவ்வளவு அழகும் சக்தியும் உள்ள பாஷை என்பதை இவருடைய பேச்சில் இருந்துதான் தெரிந்து கொண்டேன்!" என்றார்.

ஜெனரல் ஸ்மட்ஸ்சும் இவருடைய ஆங்கிலப் பேச்சிலே மயங்கியவர்தான். அதனாலே தான்காந்திஜி இவரை வற்புறுத்தித் தென்னாபிரிக்காவுக்கு இந்திய அரசாங்கத்தின் ஏஜெண்ட் ஜெனரலாச் செல்லுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்.

"உங்கள் பேச்சுவன்மையிலே ஏற்கனவே மயங்கி இருக்கின்ற ஜெனரல் ஸ்மட்ஸ் இந்தியர் விடயத்திலே உங்கள் பேச்சைக் கேட்பார்... அவர் மனதும் இளகக் கூடும்" என்றார் காந்திஜி. அதனாலே சாஸ்திரியாரும் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

தென்னாபிரிக்காவிலே இருந்த வெள்ளையர்களுக்கு இந்தியர் என்றால் மிகவும் இளக்காரம். இந்தியாவைப் பற்றி கேவலமான அபிப்பிராயம். இந்தியாவைப்பற்றி அவர்கள் என்ன சொல்லுவார்கள் தெரியுமா?

இந்தியா பேய், பிசாசுகள் நிறைந்த நாடு... இந்தியர்கள் காட்டுமிராண்டிகள்.... என்பார்கள்.

இந்த அபிப்பிராயத்தை சாஸ்திரியர்தான் மாற்றினார். ஏராளமான கூட்டங்களிலே உரையாற்றினார். இந்திய நாட்டுப்பண்பாடு, கலாசாரம், ஆன்மீகம் இதைப்பற்றியெல்லாம் இவர் பேசியதை கேட்டதற்குப் பின்னர் தான் 'ஓகோ அப்படியா விடயம்?' என்பதை புரிந்துகொண்டார்கள்.

அங்கே இருந்த இந்திய சிறுவர்களுக்கு மேற்படிப்புக்கான வசதி இல்லை... அந்த வசதியை செய்து கொடுப்பதற்கு வெள்ளைக்கார அரசாங்கமும் சம்மதிக்க வில்லை! உடனே சாஸ்திரியார் தன்னுடைய பேச்சு வன்மையினால் இலட்சக்கணக்கான ரூபாய்களை வசூலித்து ஒரு கல்லூரி நிறுவினார்.

டர்பன் நகரிலே அவர் நிறுவிய அந்தக் கல்லூரி 'சாஸ்திரி காலேஜ்' என்ற ஒரு பெயரோடு சிறப்பாக நடத்திக் கொண்டு வருகின்றது.

1925 இல் தில்லிராஜங்க சபையிலே சீனிவாச சாஸ்திரியார் பேசுகின்றார். ரௌலட் சட்டத்தை எதிர்த்துப் பேசுகிறார். அவருடைய பேச்சை காலரியிலே உட்கார்ந்து கேட்கின்றார் காந்திஜி. அவருடைய வாதம் இதுவரை மட்டுமில்லை... எல்லோரையுமே பிரமிக்க வைக்கின்றது! அதனாலேதான் அந்தச் சட்டம் நிறைவேறினாலும் அதை நடைமுறைக்கு கொண்டு வர அவர்கள் துணியவில்லை!

அந்தக் காலத்திலே அரசாங்கத் துறைகளிலே காரியத் தரிசி, கூட்டுக் காரியதரிசி போன்ற பெரிய பதவிகளிலே இந்தியர்களுக்கு இடம் இல்லை...

இதைக் கண்டித்து சாஸ்திரியார் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

இதற்கு ஆங்கிலேயர் கூறிய விளக்கம் என்ன தெரியுமா?

"இந்திய அதிகாரிகளுக்கு திறமை போதவில்லை... அதனாலே தான் மேல் பதவிக்கு அவர்களாலே வர முடியவில்லை!" என்றார்கள். உடனே சாஸ்திரியார் சூடாக இதற்குப் பதில் அளித்தார் எப்படித் தெரியுமா?

"எங்களுக்கு கடுமையான வேலைகளைக் கொடுத்தீர்கள். அதை செய்து முடித்ததும் அதைவிட கடுமையான வேலைகளை கொடுத்தீர்கள். அதையும் செய்து முடித்தோம்! அதற்குப் பின்னர் புலிப்பாலைக் கொண்டு வா என்று உத்தரவு போட்டீர்கள்... அதையும் பாடுபட்டு கொண்டு வந்தோம்... ஆனால் இப்போது என்ன சொல்கின்றீர்கள்... இது பெண் புலிப்பால் நான் கேட்டது ஆண் புலிப்பால்... அது தான் வேண்டும் என்கின்றீர்கள்... இது அடுக்குமா?" என்று கேட்டார்.

எல்லோரும் ஆடிப்போய் விட்டார்கள். அப்பேற்பட்ட பேச்சுத் திறமை.

கால வரம்புக்குள்ளே பேசி முடிப்பது இவருக்கு கைவந்த கலை. லண்டனிலே வட்ட மேசை மாநாடு நடக்கின்றது. பல பேர் பேச வேண்டி இருக்கின்றது... அதனாலே ஆளுக்கு பத்து நிமிடம் அவகாசம் கொடுத்தார் பிரிட்டிஷ் பிரதமர் ராம்ஸே! அப்படி இருந்தும் சிலபேர் அதிகபடியாக பேசி வெறுப்பூட்டினார்கள்! ஆனால் சீனிவாச சாஸ்திரி குறிப்பிட்ட நேரத்திற்குள்ளே கச்சிதமாக கூற வேண்டியதை கூறி முடித்தார்!

"உங்கள் பேச்சு ஓர் அற்புதச் சுருக்கம்!" என்று பாராட்டினார் பிரிட்டிஷ் பிரதமர். அப்படிப்பட்ட சில்வர்டங் சீனிவாச சாஸ்திரியார்.

இந்தக் காலத்துப் பேச்சாளர் ஒருத்தர்... தன்னுடைய பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டார். "நான் எவ்வளவு நேரம் பேச வேண்டும்?" என்று!

உடனே கூட்டத்திலே இருந்த ஒருவர் எழுந்து "நீங்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டுமென்றாலும் பேசுங்கள்... ஆனால் நாங்கள் ஐந்து நிமிடத்திற்கு மேலே இங்கே உட்கார்ந்திருக்க மாட்டோம்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் மக்களை அடிமைகளாக வைத்திருக்கவே அரசு விரும்புகிறது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்

இலங்கையின் சுதந்திர தினத்தை வடக்கு மாகாண சபை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்த வேண்டும்.

இதன்மூலம் சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகளுக்கு மரண அடி கொடுக்க முடிவதோடு சர்வதேசம் எமது நிலையை தெளிவாகப் புரிந்து கொள்ளும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும், வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலர் ஆகியோரின் மாற்றத்திற்கு விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளன. யாழ். ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் ஒருமணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபை திறம்பட செயற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் மத்திய அரசும் ஆளுநரும் முட்டுக்கட்டையாகவுள்ளனர். அதற்குத் துணையாக பிரதம செயலரும் இருந்து வருகின்றார்.

அரசின் இந்நடவடிக்கைக்கு எதிராக எமதுமக்களைஒன்றுதிரட்டிபோராட வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. ஆளுநருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து 3இல் இரண்டு பெரும்பான்மையுடன் ஆளுநரை வெளியேற்ற வேண்டும்.

எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் ஆளுநர், பிரதமசெயலர் மாற்றம் தொடர்பில் உரியமுடிவு அறிவிக்கப்படாவிட்டால் போர்ப் பிரகடனம் போன்ற முடிவு அறிவிக்கப்பட்டு வடமாகாண சபை போர்க்களமாக இருக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

தொடர்ந்தும் நாம் ஜனாதிபதிக்கு பயந்து கொண்டு இணக்க, வணக்க, சரணாகதி அரசியலை செய்து கொண்டிருக்க முடியாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாகாண ஆட்சி மன்றகுழுக் கூட்டங்களை குறைந்தது ஒரு மாத அளவிலாவது கூட்டி வடமாகாண சபையை வழி நடத்திச் செல்ல வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தலில் படுதோல்வியடைந்த அரசு, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மாகாண சபையை பெருவெற்றியுடன் கைப்பற்றியதன் பின்னர் ஆளுநர் மற்றும் பிரதம செயலரினூடாக தான் நினைத்தவற்றை சாதித்து வருகின்றது.

தமிழ்மக்களை தொடர்ந்தும் தமது அடிமைகளாக வைத்திருக்கவே அரச இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

இதனைவிட வடபகுதியில் கட்டாயக் காணி சுவீகரிப்பிலும் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

ஆளுநர் மாற்றம் உட்பட இவற்றுக்கு எதிராக மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் அரசு அதனை கண்டு கொள்ளாமல் விட்டாலும் அரசின் தவறுகளை எமது பிரேரணைகள் மூலம் சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்த வேண்டும்.

இவ்வாறு செயற்பட்டு வரும் அரசுக்கும் சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகளுக்கும் நாம் மரண அடி கொடுக்க வேண்டும். பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினமாகும். அதனை வடக்கு மாகாண சபை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்த வேண்டும். இது சிங்கள ஆட்சியாளர்களுக்கு மரண அடியாக இருக்கும் என்றார். (அ-4)

# பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்

(துனங்கிளப்பு)

அறவழி போராட்டக்குழுவினரால் பல்வேறு பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன்படி அலுமினியப் பிணைப்பு, வெல்டிங்வேக், கணனி மென்பொருள், வன்பொருள், தோல் பொருள் உற்பத்தி, தையல், அழகுக் கலை, ஐசிங் கேக், ஆங்கில மொழி, சிங்கள மொழி ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனவே, பயிற்சி நெறிகளில் பங்குகொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னால் கைதடி நுணாவில் பகுதியில் அமைந்துள்ள அறவழி போராட்டக்குழு அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-37)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 80 |
| தக்காளி | 40 | 30 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 30 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 40 |
| கரட் | 50 | 40 | 60 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 160 | 100 | 70 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 20 | 50 | 40 |
| பயற்றங்காய் | 100 | 200 | 60 | 100 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 130 | 100 | 100 |
| முருங்கைக்காய் | — | 800 | — | — |
| போஞ்சி | 40 | 40 | 100 | 70 |
| கத்தரிதம்புள்ள | 50 | — | — | — |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 30 | 30 | 70 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 30 | 35-40 |
| இராசவள்ளி | 80 | 90 | 90 | 100 |

# இராசி பலன்

*24.01.2014*

*(தை 11, வெள்ளிக்கிழமை )*

*சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு*

*அட்டமி பிற்பகல் 5.52 மணிவரை*

*சுவாதி பின்னிரவு 12.24 மணிவரை*

*இராகுகாலம் 11.06-12.36 மணிவரை*

*சுபநேரம் 6.36-8.06 மணிவரை*

*அட்டமி-நவமி*

**மேடம்**



கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், வாழ்க்கைத்துணை வழியே மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்**



ஆசைப்பட்ட பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சிதரும், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்**



அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எதிர்பாராத சில காரிய இடையூறுகள் ஏற்பட வாய்ப்புண்டு, பிறருக்கு உதவுவதில் பிரியப்படுவீர்கள், உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்**



கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிங்கம்**



சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மனோதைரியம் கூடும்.

**கன்னி**



திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், உங்கள் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்**



தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வெகுமானம் கிடைக்கும் வாய்ப்புண்டு, விரும்பிய உணவுப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்**



மனச் சோர்வுகள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் உருவாகும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், சயன சுகக் குறைவான நாள், புதிய பொருட்கள் வாங்குவதில் பிரியப்படுவீர்கள்.

**தனுசு**



பயணங்கள் எண்ணியபடி கைகூடும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**மகரம்**



நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத நேரத்தில் உதவிகள் கிடைக்கலாம், செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம், புதிய தகவல்கள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.

**கும்பம்**



நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல்நலம் சீராகும், தொலைபேசித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மீனம்**



வரவும் செலவும் சமமாகும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், பிறருடைய வேலைகளையும் நீங்கள் எடுத்துச் செய்யும் சூழ்நிலை உருவாகும், மனக் கிலேசங்கள் ஏற்படலாம்.


வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லைவெளி பாலத்தினூடாக பயணிப்போருக்கு எச்சரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி வல்லைப்பாலத்தில் பய ணிக்கும் பயணிகளை அவதானமாக போக்குவரத்துச் செய்யுமாறு எச்சரிக்கை பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



வல்லைப்பாலம் சில வருடங்களுக்கு முன்னர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.


இரும்பு கேடர்கள் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள மேற்படி பாலம் தற்போது தகடுகள் தேய்ந்து காணப்படுவதால் வாகனங்கள் வழுக்கும் தன்மை அதிகமாக உள்ளது.

இதனால் அண்மையில் பெய்த மழையால் சிறு விபத்துச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளது.

இப்பாலத்தை அதிகமாக யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சிக்கு செல்வோரும் வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவோரும் பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் செல்வோரே இப்பாலத்தில் வழுக்கி விபத்துக் குள்ளாகின்றனர்.

எனவே பயணிகளை அவதானமாக இப்பாலத்தினால் பயணிக்குமாறு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-9-24)




நன்றி: ஐலன்ட்

# சர்வாதிகாரி என அடையாளப்படுத்துமளவில் ஜனாதிபதி மஹிந்தவின் செயற்பாடுகள் உள்ளன

## வடக்குமாகாண முதலமைச்சர் ஆவேசம்

(யாழ்ப்பாணம்)

இனப்படுகொலைகளில் ஈடுபட்டார் என்ற அவச் சொல்லுக்கு ஆளான ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அவரை சர்வாதிகாரி என்று அடையாளம் காட்ட அனுசரணையாகயிருந்து வருகின்றது என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.வலி.தெற்கு பிரதேச சபை யின் (சுன்னாகம்)உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்றுக்காலை பிரதேச சபையின் தலைவர் தி.பிரகாஸ் தலைமையில் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் வடமாகாண மக்களின் ஏகோபித்த தெரிவு தெரியவந்ததால் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் ஒத்துழைத்து வடக்கை முன்னணிப் பாதையில் செல்ல வழி அமைப்பதாக வாக்குறுதி அளித்தார் ஜனாதிபதி. ஜனாதிபதிச் செயலணியின் செயற்பாட்டை வடமாகாணத்தில் நிறுத்துவோம் என்றார்.

ஒரு மாத காலத்திற்குப் பதுங்கி இருந்து விட்டு ஜனாதிபதி செயலணி தொடர்ந்தும் வலுவில் இருக்கும் என்று சகோதரரை விட்டுச் சொல்லச் செய்தார்.

கேட்பது கொடுக்கப்படும் என்று என்னிடம் இம்மாதம் 2 ஆம் திகதி உற்சாகமாகக் கூறிவிட்டு, கேட்பதை எல்லாம் நிராகரித்து விட்டுகேட் காதவற்றை தருவதாகப் பேரம் பேசினார். அதுவும் சட்டத்திற்குப் புறம்பாக நாங்கள் நடந்து கொள்கின்றோமே என்பதை அறிந்தும் அறியாதது போல் தற்பொழுது நடந்து கொள்கின்றார். இதனால் ஏற்படப் போகும் பாதிப்பு அவரையே தாக்கவிருக்கின்றது.

தேர்தலை நடத்துவதாகக் கூறி நடத்தாது இருந்து வந்ததும் அயலவர் நெருக்குதலின் காரணமாக அதை நடத்த முன்வந்ததும் பின்னர் நடத்துகின்றோம். பாருங்கள் வடக்கில் தேர்தலை என்று மார்தட்டித் தன்னை ஜனநாயக முறையில் நடப்பவன் என்று ஊர் அறிய உலகறிய உரக்கக் கூறிவந்தவர் எவ்வாறு இராணுவத்தைக் கொண்டு மக்களை அச்சுறுத்தித் தனது ஆசையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுத்தார் என்பதும் தேர்தல் தனக்கெதிராகச் சென்றதும் நாங்கள் கேட்டல்தத் தருவார்கள் என்று தம்மை அடையாளப்படுத்திவிட்டுச் சட்டத்தில் இருப்பதையும் தராமல் தவிர்த்து வருகின்றார் என்பதும் ஜனாதிபதியின் குணாதிசயத்தையும் குண இரகசியத்தையும் அம்பலப்படுத்திவிட்டது. ஆனால் இவையாவும் முக்கியமல்ல.

13 ஆவது திருத்தச் சட்டம் ஒன்றுக்கும் உதவாதது. ஒரு கையால் கொடுப்பது போல் கொடுத்து மறுகையால் திருப்பி எடுக்கும் தன்மை வாய்ந்தது என்று நாங்கள் தேர்தலின் போது கூறியவை தற்பொழுது தெளிவுபடுத்தப்பட்டு வருகின்றது என்பதை ஜனாதிபதியே முன்னின்று சர்வதேச நாடுகளுக்கு உணர்த்தி வருகின்றார் என்பது தான் அவருக்கும் அவரின் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டிருக்கும் அதி பெரிய பாதிப்பு.

அதுவும் இனப்படு கொலைகளில் ஈடுபட்டார் என்ற அவச் சொல்லுக்கு ஜெனீவாவில் முகம்



கொடுத்து வரும் அவர் தமிழ் மக்களுக்குச் சட்டப்படி கொடுக்க வேண்டிய சொற்ப சலுகைகளையுங் கொடுக்காது ஏமாற்றி வருகின்றார் என்பது தமிழ் மக்களின் மீது வைராக்கியத்துடன் நடந்து வருகின்றார் என்ற அவருக்கெதிரான குற்றச்சாட்டை நிரூபிப்பது போல் அவரின் நடவடிக்கைகள் இருந்து வருகின்றன.

நாளையே நாங்கள் நீதிமன்றங்களை நாடலாம். என்ன அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களின் கருத்தொருமிப்புக்கு மாறாக அலுவலர் ஒருவர் பதவியில் தொடர்ந்திருக்கின்றார் என்ற கேள்வியை நீதிமன்றங்களைக் கேட்க வைக்கலாம்.

சட்டம் குறித்த நியமனத்தில் ஜனாதிபதிக்கும் முதலமைச்சருக்கும் இடையில் கருத்தொருமிப்பை கட்டாயப்படுத்தி இருக்கும் போது எவ்வாறு சட்டத்திற்கு புறம்பான முறையில் பதவியிலிருக்கின்றீர்கள் என்று கேட்கலாம். ஆனால் அவையல்ல எமக்கு முக்கியம் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் ஈடுபட்ட தற்குக் காரணங்கள் பல இருந்தன.

மக்களின் மனமறிய,மக்களைப் பிரித்தாள எத்தனித்தவர்களின் மனக் கோட்டையைத் தகர்த்தெறிய, மக்கள் அரசாங்கம் என்று மார் தட்டி திரிந்த அரசாங்கத்தின் முகத்திரையைக் கிழிக்க, பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு உதவாது என்று நாம் வாய்கிழியக் கூறியும் அதைச் செவிமடுக்காத அரசாங்கங்களுக்கு அதை நடைமுறைப்படுத்திக் காட்டி அவர்களுக்கு புரிய வைக்க,எமது கோஷமும் கொள்கையுந் தமிழர் தன்னாட்சி என்ற நிலைப்பாட்டை உலகறியக் கூறிவைக்க இவ்வாறு பல காரணங்கள் கூறலாம். 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்காது என்பதையே முக்கியமாக நாங்கள் கூறி வந்தோம்.

ஒன்று அந்தச் சட்டம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதால் மத்திய அரசாங்கத்திற்குச் சார்புடையதாகவே இருக்கும் என்பது. அதனால் தான் சமஷ்டி முறையை சிபார்சு செய்தோம்.

ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அவரை அடக்குமுறைக்கு அழைத்துச் செல்லவல்லன என்பது. இன்று அது கண்கூடு. வவுனியாவில் இன்று (நேற்று) மாலை காக்கைக் கூட்டினுள் [illegible] நிகழ்ச்சியொன்று [illegible]

1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டம் நிறைவேற்று அதிகாரங்களை மத்திய அரசாங்க அலுவலர் வசம் கொடுத்திருந்தாலும் அவர்கள் ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் கடமையாற்றக்கஷ்டப்படுவார்கள் என்பது. அது இன்று நடைபெறுகின்றது.

சட்டம்,கல்வி, காணி போன்றவற்றின் மீது மாகாணங்களுக்கு அட்டவணைப்படுத்தி அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பல விதங்களில் கட்டுப்படுத்தி மத்திய அரசு தன் கையகப் படுத்தக்கூடும் என்பது. இன்றைய அரசாங்கத்தின் இது சம்பந்தமான நிலைப்பாடு நாடு அறிந்ததே. தேசியக் கொள்கை என்ற அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை வலுவற்றதாக்க முடியும் என்பது எம்மால் இராணுவத்தை வெளியேற்ற முடியாததற்கு அரசாங்கம் முன்வைக்கும் காரணம் தேசியப் பாதுகாப்பு என்பது.

வடகிழக்கு அரச காணிகள் சார்பான அதிகாரம் அரசாங்கத்திடம் இருந்து வருகின்றது என்பது. இதன் காரணத்தால் தமிழ் மக்களின் காணிகள், வெளியிடங்களில் இருந்து வந்தவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

பொலிஸ் அதிகாரமும் அப்படியே என்பது.

ஜனாதிபதி செயலணி வடக்கில் நடக்கும் அபிவிருத்தி அனைத்துக்கும் அனுமதி அளிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்து வருவது. இன்றும் அது நடைமுறையில் இருந்து வருகின்றது.

வருடாவருடம் நாம் செலவிடும் அத்தியாவசிய அலுவலர்கள் செலவும் அலுவலகச்செலவுமான மீண்டுவரும் செலவீனங்கள் மத்திய அரசாங்கத்தையே எதிர்ப்பார்த்திருக்கின்றன. ஈற்றில் எமக்குப் பாதீட்டில் கிடைப்பது அந்தத் தொகையுடன் சேர்த்து ஒரு சிறுதொகையே. ஆதலால் எமது அபிவிருத்தியை நாமே பார்த்துக் கொள்ள இடமளியாதிருப்பது.

எனவே தான் இந்தப் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாகச் செயற் படுத்தினாலும் எமக்குக் கிடைக்கப் போவது ஒன்றுமில்லை என்பதை நாமே தேர்தல் காலத்தில் வலியுறுத்திவிட்டு அதே நேரம் இருக்கும் கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையும் கைவிட்டு விட்டால் கிழக்கில் நடந்தது எமக்கு இங்கும் நடக்கும் என்று கூறினோம். அப்பேர்ப்பட்ட ஒரு நிகழ்வு நடைபெறுவதை நிறுத்தவும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எத்தனித்துச் சட்டத்தில் இருக்கும் நட்டங்களை வெளிப்படுத்தவும் தான் நாம் தேர்தலில் நின்றோம்.

இப்பொழுது எமது எண்ணங்கள் ஈடேறி வருகின்றன. எது எது நடக்கும் என்று நாம் கூறினோமோ அவை நடக்கின்றன. அதற்கு மேலாகவும் நடக்கின்றன.

அதற்கு மேலாக நடந்தேறியுள்ளது தான் ஜனாதிபதி தான் தோன்றித்தனமாக தான் அளித்த வாக்கை மீறி நடந்து கொள்வது அதுவும் சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொள்வது.

தமிழ் மக்களை இனரீதியாகப் படுகொலைக்கு ஆளாக்கியது அரசாங்கம் என்று அகில உலகமும் கூறும் போது அவர்களின் இன்றைய மாகாண சபைக்கு எதுவுமே வழங்கமாட்டோம் என்று அடம்பிடிக்கின்றார் ஜனாதிபதி என்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும்.

அது தான் வரப்போகும் தேர்தல் தமிழருக்கு எதுவும் கொடுக்கவில்லை. மறுத்து விட்டேன் என்று கூறினால் தான் தனக்குச் சிங்களவர் வாக்குக் கிடைக்கும் என்று எண்ணுகின்றார் ஜனாதிபதி என்று தெரிகின்றது.

ஆனாலும் அவரின் நடவடிக்கைகள் அவருக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றன. மேலும் அதிகாரத்தை தம் வசப்படுத்தும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அவரைச் சர்வாதிகாரி என்று அடையாளங் காட்ட அனுசரணையாக இருந்து வருகின்றன.

அண்மைக் காலங்களில் அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்றே சகல நாடுகளும் குரல் எழுப்பி வருகின்றன. இந்தியா கூட அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தென் ஆபிரிக்கா முன்னரே அதைச் செய்து வந்துள்ளது. அதாவது உள்ளூர் ஆட்சி அமைப்புக்களுக்குப் போதிய அதிகாரங்களை அவை வழங்கியுள்ளன.

எப்பொழுது அதிகாரங்களை தனிப்பட்டவர்கள் அல்லது குடும்பங்கள் அல்லது கட்சிகள் அல்லது இராணுவம் தம்வசம் பதுக்கிப் பாதுகாக்க எத்தனிக்கின்றனவோ அது ஈற்றில் கவலையையே அவர்களுக்கு உண்டாக்கும்.

அண்மைக்காலத்தில் அவ்வாறு சர்வாதிகாரிகளாக மாறிய நபர்கள் பலர் இறுதியில் தமது தவறுகளை உணர்ந்து கொள்ளும் படியாக நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. எகிப்தின் ஹோஸ்னி முபாரக், பாகிஸ்தானின் பர்வேஸ் முஷாரப், ஈராக்கின் சதாம் உசேன் எவ்வாறு தமது தவறுகளை உணர்ந்து கொள்ள வேண்டி வந்தது என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆண்ட நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையையும் அவருக்கு உலகம் ஈந்த மதிப்பையும் ஆட்சியாளர்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

வடமாகாணத் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் கூட்டுறவு அடிப்படையில் இருப்பவற்றை வைத்து இசைவாக இயங்கும் அடிப்படையில் முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற அடிப்படையில் இயங்கி முன்னேற முடிவு எடுத்துவிட்டார்கள்.உங்கள் பிரதேச சபைகள் இந்த உன்னதமான புனிதப் பயணத்தில் உறுதுணையாக இருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

உள்ளூர் ஆட்சி மன்றங்கள் உணர்ந்து செயற்படவும் உயர்ந்து சிறக்கவும் வடமாகாண சபை உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த உள்ளூராட்சி வாரத்தில் உங்களுக்குக் கூறி வைக்கின்றேன்.

நடக்க வேண்டியவை நன்றாகவே நடப்பன என்ற நம்பிக்கையுடன் இருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் விடுதலை பெறுவான் என நம்பியிருக்கின்றேன்

## அற்புதம்மாள் தெரிவிப்பு

வீரப்பன் கூட்டாளிகளுக்கு தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது போல், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 23 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் பேரறிவாளனும் விடுதலையாகி விடுவார் என்ற நம்பிக்கை உள்ளது என்று அவரது தாய் அற்புதம்மாள் தெரிவித்தார். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகியோருக்கு 2000 ஆம் ஆண்டு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு கருணை மனு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் 2011 ஆம் ஆண்டுதான் குடியரசுத் தலைவர் அதனை நிராகரித்தார். இந்த வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வருகிறது.

தற்போது உச்சநீதிமன்றத்தில் 15 பேருக்கு கிடைத்திருக்கும் தீர்ப்பு ராஜீவ்காந்தி கொலை வழக்குக்கும் பொருந்துவதால் பேரறிவாளன் விடுதலை ஆகிவிடுவார் என தான் நம்புவதாக அவரது தாயார் அற்புதம்மாள் கூறினார். சென்னை புத்தகக் கண் காட்சியில் மரண தண்டனைக்கு எதிரான புத்தகங்களையும், படங்களையும் கொண்ட கடையை வைத்துள்ள அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது, தூக்கு தண்டனை அரிதிலும் அரிதான வழக்குகளுக்கு வழங்கப்படுவதாக கூறுகிறார்கள். ஆனால், அது நீதிபதிகளின் மனநிலையையும், பொலிஸாரின் வழக்கை பதிவு செய்யும் பிரிவுகளையும் பொறுத்தே கொடுக்கப்படுகிறது. எனது மகன் எதிர்வரும் 29ஆம் திகதி விடுதலை அடைவான் என்று நம்புகிறேன் என்றார்.

(அ-2)


सत्यमेव जयते

**CONSULATE GENERAL OF INDIA**
**JAFFNA**

**INVITATION FOR 64th ANNIVERSARY OF INDIA'S REPUBLIC DAY IN JAFFNA**

Consul General of India, Jaffna shall be holding a Flag Hoisting ceremony on the occasion of 64th Anniversary of India's Republic Day at the Consulate General of India, Jaffna's premises at 14, Maruthady Lane, Nallur, Jaffna between 9.00 AM to 10.00 AM on Sunday, 26th January 2014. Indian National flag will be unfurled at 9.00 A.M.

All Indian nationals are welcome to attend. Only Indian nationals holding some identity document shall be allowed entry into the premises.

(சி-6306)






பரிசுச் சீட்டிழுப்பு முடிவுகள்
வடமாகாணத்தில் 102 அதிஷ்டசாலிகள்
14 இலட்சம் பெறுமதியான பரிசுகள்...

கிறீன் கிராஸ் ஹொட்டல் மண்டபத்தில்
இன்று பி.ப 2.30 மணிக்கு
வழங்கப்படவுள்ளது.

வெற்றியாளர்கள்
அனைவருக்கும்
எமது பாராட்டுக்கள்...

(சி-6311)

அடுத்த மாபெரும் சீட்டிழுப்புக்கு இன்றே சேமியுங்கள்!

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

உதவிப்பொது முகாமையாளர்
இலங்கை வ[illegible]



மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

29ம் ஆண்டில்

யாழ். **கலாலயா**
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**துரித 3 மாத கால பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

* **கேக் ஐசிங் வடிவமைப்புகளும் உணவு தயாரித்தலும்** : பட்டர், றோயல், Parchment, Frosting, Fondant, Water Icing வகைகள். Sugar Flowers. மற்றும் பலவகையான உணவுகள், 6 வகையான கேக், பீஸா (Pizza), சிற்றுண்டிகள், சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மற்றும் பல.
* **கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்** : 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல் (Hair Straightening) Re- Bonding, முடி சுருட்டுதல்,Perming, முடி நிறமூட்டுதல் (Hair Colouring), பலவிதமான முடி வெட்டுதல்கள், Oil Massage.
* **FACIALS (முக அழகுக்கலை) பல வகை.**
* கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure) nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), Waxing, தமக்குத்தாமே FACIAL செய்தல்.



* **BRIDAL DRESSINGS:** இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் **Modern,** கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறையும் பயிற்றுவிக்கப்படும்.

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

* (B)பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.



**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-01-2014**
**புதன் காலை 9.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 01-02-2014**
**சனி காலை 9.00 மணி**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**

-இயக்குநர்-



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2 கி.பா: 34 ½<br>தகைமை/தொழில்: ஜேர்மன் - சிற்றிசன்<br>தொ.இ: B/2724 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 53 செவ். 4 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA (அறுதியாண்டு)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/2728 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 18 ¾ சூரி. செவ். 6 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: PHd in Electrial Engineering / விரிவுரையாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/2727 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 55 செவ். 1 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, BSc / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/2730 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: 39 செவ். 1இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / நகைக்கடை (கொழும்பு)<br>தொ.இ: B/2729 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 61 ¾ செவ். 1இல் உயரம்: 5'5'<br>தகைமை/தொழில்: தனியார் கம்பனி (கனடா PR)<br>தொ.இ: G/2731 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 13 ¼ சூரி. செவ். 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc, CIMA, CPA /கணக்காளர் (அவுஸ்திரேலியாPR)<br>தொ.இ: B/2733 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 32 ½ செவ். 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, SLIIT / Trainee Quality (Engineer)<br>தொ.இ: G/2737 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# ஆசிரிய மாணவர்களின் கற்றல் குணவியல்புகள்

### கருவறை முதல் கல்லறை வரை கல்வி

கல்வி என்பது கருவறை முதல் கல்லறை வரை தொடரக்கூடியதாகும். இன்ன வயதில்தான் ஒருவர் கற்கவேண்டும் என்பதை எவராலும் வரையறுத்துக் கூற முடியாது. கற்றல் ஒரு வாழ்க்கை நீடித்த செயன்முறையாகும். வளந்தோர் பருவத்தை தீர்மானிக்கும் முக்கிய உளவியல் காரணியாக விளங்குவது சுய எண்ணக்கரு விருத்தியாகும். இவ்வாறான சுய எண்ணக்கரு விருத்தியால் குறிப்பிட்ட ஒரு நபர் சுயமாக தீர்மானமெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்கிறார். அது மாத்திரமல்லாமல் அத்தீர்மானத்திற்கு வகைகூறும் தன்மையையும் அவர் வளர்த்துக்கொள்கிறார். அறிவு விருத்தி தொடர்பாகப் பியாயேயின் கோட்பாட்டின்படி, *"கற்கும் வளர்ந்தோர் அறிவு விருத்தியின் இறுதிக்கட்டத்தை அடைந்திருப்பார்கள். அவர்கள் முறைப்படியான செயல்சார் சிந்தனை விருத்தியையும், பண்புசார் சிந்தனை விருத்தியையும் கொண்டவர்களாகத் திகழ்வார்கள்."* வளர்ந்த கற்போராகிய ஆசிரிய மாணவர்களிடம் பல்வேறு வகையான கற்றல் குணவியல்புகளை அவதானிக்க முடியும்.




சிங்கெனிங்கும் கவிங்கேற்றும் ( Chickening and Havigherst ) வளர்ந்த கற்போரை வயதை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு பாகுபடுத்துகின்றனர்.

| வயது | விருத்திச் சந்தர்ப்பங்கள் |
|---|---|
| 16 - 23 | பின் கட்டிளமைப் பருவம் (இளைஞர்) |
| 23 – 35 | முன் வளர்ந்தோர் பருவம் |
| 35 – 45 | நடு மாறுநிலைப் பருவம் (Middle Transition) |
| 45 – 57 | நடு வளர்ந்தோர் பருவம் |
| 57 – 65 | பின் வளர்ந்தோர் மாறுநிலைப் பருவம் |
| 65க்கு மேல் | பின் வளர்ந்தோர் பருவம் |

ஆசிரிய மாணவர்களின் கருத்துக்கள் அல்லது கருதுகோள்கள் மற்றவர்களில் தங்கியிராது சுயாதீனமானவையாக இருப்பதைக் காணலாம். அதாவது கருதுகோள்களை தாமாகவே முடிவுசெய்ய விரும்புவர். பிறரின் தலையீட்டை அதிகம் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தாங்கள் சுயாதீனமாக இயங்குவதையே பெரிதும் விரும்புவர். எனவே ஆசிரிய கல்வியியலாளர் அவர்களுக்கு பாடவிடயங்களைத் திணிக்காமல் அவர்கள் தம் சுய கருத்துக்களைச் சொல்வதற்கு வசதி செய்பவராக (facilitator) இருக்கவேண்டும்.

### ஆசிரிய கல்வியியலாளர் வசதி செய்பவர் (Facilitator)

ஆசிரிய மாணவர்கள் கொண்டுள்ள அனுபவமானது, அவர்களின் சுயகற்றலுக்கு போதிய வளம்மிக்கதாக உள்ளது. அத்துடன் இவர்கள் கொண்டுள்ள போதிய அனுபவம் காரணமாக ஆசிரிய கல்வியியலாளர்களால் கற்பிக்கப்படும் விடயங்களை இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக காணப்படுகின்றார்கள். அதாவது இவ்வளர்ந்த கற்பவர்களிடமுள்ள அனுபவமானது, புதிய விடயங்களை விளங்கி உள்வாங்கிக்கொள்ள அவர்களுக்கு பெரிதும் உதவுகின்றது. எனவே இவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரிய கல்வியியலாளர்கள் அவர்களுடைய அனுபவங்களினூடாக கற்பித்தலை மேற்கொண்டால் அது போதிய வினைத்திறனுள்ள கற்பித்தலாக அமைவதுடன் வளர்ந்த கற்பவர்களை ஆர்வத்துடன் கற்கவும் தூண்டும்.

சாதாரண பாடசாலை மாணவனொருவ



னது கற்பதற்கான ஆயத்த நிலையானது, அவனது பௌதீக, உள, சமூக விருத்தியில் பெரிதும் தங்கியிருக்கும். ஆனால் வளர்ந்த கற்போனது அதாவது ஆசிரிய மாணவனது கற்றலுக்கான ஆயத்த நிலையானது, வாழ்க்கைக்குத் தேவையான சவால்களை எதிர்கொள்ள தேவையான அறிவைப் பெற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே இவர்களுக்கு கற்பிக்கும் போது அன்றாட வாழ்க்கையுடன் வடயங்களை தொடர்புபடுத்தி கற்பித்தால் அவர்கள் அவற்றை இலகுவில் புரிந்துகொள்வர்.

### ஆராயும் குணம் (Curiosity)

வளர்ந்த கற்போர், தாம் கற்ற ஒரு விடயத்தை உடனடியாகப் பிரயோகித்துப் பார்க்க பெரிதும் விரும்புவர். ஆகவே அதற்கேற்றாற்போல் ஆசிரிய கல்வியியலாளர் கல்வித் திட்டமிடலை மேற்கொண்டு கற்பிக்கவேண்டும். இவர்கள் தாம் கற்ற எந்த ஒரு புதிய விடயத்தையும் உடனடியாக பிரயோகித்துப் பார்த்து அதன் சாதக பாதக பலன்களை அலசிஆராய்ந்து, அதை வாழ்க்கைக்குத் தேவையானதாக மாற்ற முயல்வர். எனவே இவர்களுக்கு கற்பிக்கப் போகும் விடயங்களை அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி விட்டால் அவர்களாகவே தொடர்ந்து கற்றுக்கொள்வர்.

ஆசிரிய மாணவர்கள் பிரச்சினையை மையமாகக் கொண்ட (Problem – Centered) கலைத்திட்டசூழலில் காணப்படுவர். இவர்களிடம் தத்தமக்கேற்ற ஒரு கலைத்திட்ட சூழல் காணப்படும். அத்துடன் அது முறையற்ற (Informal) கலைத்திட்டமாகவும் இருக்கும். எனவே இவர்களுக்கு ஒருங்கிணைந்த கலைத்திட்டமே (Collaborative Curriculum) பெரிதும் பயனளிக்கும். எனவே இவர்களுக்கு கற்பிக்கும்போது பிரச்சினையை மையப்படுத்தி, ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அடங்காமல், ஒவ்வொருவரினதும் தேவைக்கேற்றவாறு கற்பித்தலை ஒழுங்கு செய்தால் அது பயனுறுதிமிக்க கற்பித்தலாக அமையும்.

இடைநிலை வகுப்பு மாணவர்களைப்பொறுத்தவரையில் பாடத்தை திட்டமிடுபவர் ஆசிரியராகவே காணப்படுவார். பாடசாலை மாணவர்கள் பாடத்திட்டமிடலில் பங்கெடுக்க விரும்ப மாட்டார்கள். ஆனால் ஆசிரிய மாணவர்களைப் பொறுத்தவரையில் ஆசிரிய கல்வியியலாளர் மட்டும் பாடத்திட்டமிடலை மேற்கொள்வதை பெரிதும் விரும்ப மாட்டார்கள். தாங்களும் அதில் பங்குதாரராக விரும்புவர். எனவே ஆசிரிய கல்வியியலாளர் பாடத் திட்டமிடலின்போது ஆசிரிய மாணவர்களினது கருத்துக்களையும் செவிசாய்த்து இருவருமாக சேர்ந்து திட்டமிட்டால் அக்கற்பித்தல் மிகவும் உறுதி கூடியதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் அமையும்.

பாடசாலை மாணவர்களுக்கு கற்பதற்கான ஊக்கியாக வெகுமதிகளும் தண்டனைகளும் அமைகின்றன. ஆனால் இவை ஆசிரிய மாணவர்களுக்கு ஊக்கியாக பெரிதும் அமைவதில்லை. ஆசிரிய மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஊக்கிகளாக அமைபவை அவர்களது அகத் தூண்டலும்



(internal incentives) அவர்களிடம் இயல்பாகவே காணப்படும் ஆராயும் குணமும் (curiosity) ஆகும். எனவே இவர்களுக்கான கற்பித்தல் முறையானது அவர்களிடம் அகத்தூண்டலை ஏற்படுத்துவதாகவும், ஆராயும் தன்மையை ஊக்குவிப்பதுமாக இருக்குமேயானால் ஆசிரிய கல்வியியலாளரினது கற்பித்தல் பணி இலகுவாக அமையும்.


### சுய ஈடுபாடு (Self- involvement)

ஆசிரிய மாணவர்களைப் பொறுத்தவரையில் ஆசிரிய கல்வியியலாளரானவர் விடயங்களை திணிப்பவராக இல்லாமல் அவர்களுக்கு கற்பதற்கான வழிகாட்டியாகவும் (guide) கற்பதற்கு வசதிசெய்பவராகவும் (facilitator) இருக்கவேண்டும். ஏனெனில் விடயங்களைத் திணித்தால் அது வளர்ந்த கற்போரிடம் கற்கவேண்டும் என்ற ஆவலை குறைத்துவிடும். அவர்களை தானாகவே கற்க வழிகாட்டி அதற்கு வசதிசெய்து கொடுப்பவராக ஆசிரிய கல்வியியலாளர் திகழவேண்டும். அப்போதுதான் வளர்ந்த கற்போர் விருப்புடனும் ஆர்வத்துடனும் கற்றலில் ஈடுபடுவர்.

வளர்ந்த கற்போரது தேவைகளையும் விருப்பங்களையும் பரிசோதனை ரீதியான கற்பித்தல் வழங்குவதால், அதனை ஆசிரிய மாணவர்கள் பெரிதும் விரும்புவதை அவதானிப்பு அட்டவணையிலிருந்து அறியமுடிகிறது. பரிசோதனை ரீதியான கற்றலில் வளர்ந்த கற்போர் ஈடுபடும் போது, அவர்களின் தனிப்பட்ட ஈடுபாடு அதிகமாக காணப்படும். அத்துடன் தாமாகவே பிரச்சினையை விடுவிக்கும் முயற்சியை தொடங்க இம்முறை அவர்களைத் தூண்டும். பரிசோதனை ரீதியான கற்றலின் போது கற்போன், தனது முன்னேற்றத்தை அதாவது தான் கற்றுக்கொண்டவைகளை தானாகவே மதிப்பிட முடியும். இது அவர்களின் ஆவலைத் தூண்டி மேலும் மேலும் கற்க வழி கோலும்.

திசைமுகப்படுத்தப்பட்ட பரிசோதனை ரீதியான கற்றலானது, வளர்ந்த கற்போரினது சுய ஈடுபாட்டை (self-involvement) மேலும் வலுவாக்கும். இங்கு வளர்ந்த கற்போருக்கு ஆசிரியர் நேரடியாக கற்பித்தலை மேற்கொள்ளாமல், கற்றலுக்கு வசதி செய்பவராக இருந்து கொண்டு கற்போனை சுயமாக செயற்படவிட்டு அவனே பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றை தீர்க்கும் முறைகளை இனங்காண உதவவேண்டும்.

இயற்கையாகவே கற்பதற்கான தூண்டல் வளர்ந்த கற்போரிடம் காணப்படுவதால் அவர்களுக்கு பரிசோதனை வாயிலான கற்பித்தல்முறை மிகவும் உகந்ததாக அமையும். பாடவிடயத்தை சரியாக கிரகித்தால் மட்டுமே அங்கு ஓர் அர்த்தமுள்ள கற்றல் நிகழ வாய்ப்புண்டு. பரிசோதனை ரீதியிலான கற்றல் விடயங்களை இலகுவாக கிரகித்துக் கொள்ள உதவுவதால், இம்முறை ஆசிரிய மாணவர்களால் அதிகம் விரும்பப்படுகின்றது. மாணவனது சுய அறிவை (self-perception) விருத்தி செய்ய முயல்வதே கற்றலின் நோக்கமாகும். மாணவனது சுய




அறிவில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியாக பரிசோதனை வாயிலான கற்றல் அமைவதால், வளர்ந்த கற்போருக்கு இது மிகவும் உறுதுணையாக அமையும். பரிசோதனை ரீதியில் கற்கும் போது அதாவது ஒரு செயலைச் செய்யும்போது அதிக அர்த்தமுள்ள கற்றல் நிகழ வாய்ப்பேற்படுகின்றது.

ஓர் வளர்ந்த கற்போன் கற்றல் செயற்பாட்டின் பொறுப்பை தான் எடுக்கும்போது கற்றல் இலகுபடுத்தப்படுகின்றது. எனவே ஆசிரிய கல்வியியலாளர், ஆசிரிய மாணவர்களின் கற்றல் பொறுப்பை அவர்களிடமே விட்டுவிடவேண்டும். அப்போதுதான் அவர்கள் அதில் முழு ஈடுபாட்டுடன் செயற்பட வினைத்திறனான கற்றல் ஏற்பட வாய்ப்பேற்படும். ஓர் கற்றல் செயற்பாட்டை ஒரு மாணவன் தானாகத் தொடங்குவானாயின் அவனின் முழுக் கவனமும் கற்பதிலேயே குறியாகவிருக்கும். இதனால் வளர்ந்த கற்போரை தாமாகவே கற்கத் தொடங்க தூண்டக்கூடியதாக ஆசிரிய கல்வியியலாளரின் செயற்பாடு அமையவேண்டும்.

தொடரும்

**A.Gugan**
BSc.(cey), PGDE, MSc.(Phy of Mat),MATE(International)
Lecturer (SLTES III)
J/National College of Education

## வாரத்திற்கு ஒரு புதிர்! 101

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக 2012ம் ஆண்டுக்குரிய யாழ் மாவட்ட இடைவிலகலை எடுத்து நோக்கும் போது அதிகூடிய இடைவிலகலை கொண்டுள்ள பிரதேச செயலர் பிரிவு எது?

**புதிர் 101 இற்கான விடைகளை 20.01.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்

**புதிர் 100 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

சுவர்ணலதா கெங்காதரன்
கிளி / பரந்தன் இந்து மகா வித்தியாலயம்,
பரந்தன்

**புதிர் 100 க்கான கேள்வியும் விடையும்:**


சிறுவர் உரிமைகள் சமவாயத்தினால் வெளியிடப்பட்ட எத்தனையாம் சரத்தில் "தம் ஆரோக்கியம் மற்றும் கல்வி வளர்ச்சி என்பவற்றின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாய் அமையக்கூடிய வேலைகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளிற்கு உண்டு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது? 32ம் சரத்து

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 101

சரியான விடை:-..............................................
முழுப்பெயர்:-..............................................
முகவரி:-..............................................
தொலைபேசி இல:..............................................
கையொப்பம்:..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் உபகரணங்கள் இனம்தெரியாதோரால் சூறை


(முல்லைத்தீவு)

கொக்கிளாய் ஆற்றில் தடை செய்யப்பட்ட வலைகளை வெளி மாவட்ட மீனவர்கள் பயன்படுத்துகின்றனர் என பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்தமையால் அவர்களின் தொழில் உபகரணங்கள் இனந்தெரியாதோரால் சூறையாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கொக்கிளாய் புளியம்முனை இறங்குதுறையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கொக்கிளாய் கடநீரேரிகளில் கடந்த 15 ஆம் திகதிக்கு பிற்பாடு தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்திருந்தது.

ஆயினும் வெளிமாவட்ட மீனவர்கள் தடைசெய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக பயன்படுத்தி வருவதாகவும் இதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் கொக்கிளாய் கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனையடுத்து கொக்கிளாய் கடநீரேரிகளில் தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்திய புல்மோட்டையை சேர்ந்த மீனவர்களிடமிருந்து கடந்த 16ஆம் திகதி51 கூட்டு வலைகளும் 20 ஆம் திகதி 201 கூட்டு வலைகளையும் கடலில் போடப்பட்டிருந்த வேளை முல்லை. மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் கைப்பற்றினர்.

கைப்பற்றி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு பின்னர் நீதிமன்ற வளாகத்திலேயே தீயிட்டு கொளுத்தப்பட்டது.

இவ்வாறாக தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி வந்த மீனவர்கள் கடலில் வலைகளை முதல் நாள் போட்டு மறுநாள் வந்து எடுப்பதனால் அவர்களை கைது செய்யமுடியாமல் போயுள்ளது.

இந் நடவடிக்கையை அடுத்து, கொக்கிளாய் புளியம்முனை இறங்குதுறையில் தொழிலுக்கு செல்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 படகுகளும் 2 இயந்திரங்களும் உட்பட 15 மீனவர்களின் 150 இற்கும் மேற்பட்ட விடுவலைகளும் காணாமல் போயிருந்தன.

இந்நிலையில் காணாமல் போன படகு ஆற்றுக்குள் போடப்பட்டிருக்கலாம் என சந்தேகித்து தேடிய வேளை ஒரு படகு சேதமாக்கப்பட்ட நிலையிலும் மற்றைய படகு எவ்வித சேதமுமின்றியும் ஆற்றுக் குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து அப்பகுதி மீனவர்களிடையே பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு இப்பிரதேச மீனவர்கள் நேற்றையதினம் தமக்கு நடைபெற்ற இச் செயலை கண்டித்து முல்லை.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கண்டன பேரணியொன்றினை காலை 9 மணிக்கு நடத்தியதோடு, அரச அதிபருக்கும் எடுத்துரைத்துள்ளனர்.

அத்தோடு அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு சென்ற பிரதேச மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (அ-9-267)




## குளத்தில் நீராடிய இளைஞன் மரணம்

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கரும்புள்ளியான் குளத்தில் நீராடிய இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாண்டியன் குளம் கிராமத்தைச் சேர்ந்த அரசலிங்கம் வேணீஸ்வரன் (வயது 22) என்ற இளைஞன் பரிதாபகரமாக நீரில் மூழ்கி இறந்துள்ளார்.

சம்பவ தினம் தனது இரண்டு நண்பர்களு டன் குளத்தில் நீந்தி விளையாடிய போது நீரில் மூழ்கி இறந்துள்ளதாக தெரியவருகிறது.

சடலம் சுழியோடிகளினால் மீட்கப்பட்டது. பின்னர் ஸ்தலத்திற்கு வந்த மல்லாவிப் பொலிஸாரால் சடலம் மல்லாவி வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டது.


பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-9-15)





வவுனியா குருக்கள் புதுக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவியொருவர் கௌரவிக்கப்படுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# பாடசாலைகளுக்கான நீர் விநியோகம் தடைப்பட்டது



(பூநகரி)

பூநகரி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு குடிநீர் விநியோகிப்பதற்காக வ்ழங்கப்பட்ட நீர்த்தாங்கியும் உழவு இயந்திரமும் 6 மாதங்களாக சேவையில் ஈடுபடுவதில்லையென பாடசாலை சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு குடிநீரை விநியோகிப்பதற்காக வேல்ட் விசன் நிறுவனத்தினரால் 30 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் நீர்த்தாங்கியும் உழவு இயந்திரமும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பூநகரி மத்திய கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிறிது காலம் குடிநீர் விநியோகம் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுவந்தது.

ஆயினும் தற்போது சாரதி இன்மையால் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இவ்விரு வாகனங்களையும் செலுத்துவதற்காக தற்காலிகமாக சாரதி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கான வேதனம் வழங்கப்படாமையினால் அச் சாரதி இடைவிலகி விட்டார்.

இதனையடுத்து ஆறு மாதகாலமாக குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன் குடி நீர்த்தாங்கியும் உழவு இயந்திரமும் பூநகரி மத்திய கல்லூரி வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனை கண்டித்துள்ள பாடசாலை சமூகம் குறித்த வாகனங்கள் பழுதடைய முன்னர் நிரந்தர சாரதியை நியமித்து பாடசாலைகளுக்கான குடிநீர் விநியோகத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ள சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். (அ-9-84)

## ஆட்டக்காரிக்கு பங்கஸ் நோய்; விவசாயிகள் திண்டாட்டம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டம் உட்பட வன்னியில் பல இடங்களிலும் ஆட்டக்காரி நெல் இனத்தை பயிர் செய்த விவசாயிகள் அதற்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் கவலை வெளியிட்டுள்ளனர்.

கால போகத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என்பதற்காக ஆட்டக்காரி நெல்லினை விதைத்த விவசாயிகளுக்கு இவ் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களம் இந் நெல்லினை விதைப்பதற்கு உத்தரவாதம் அளிக்காத நிலையில் விவசாயிகள் இந்நெல்லை விதைத்ததால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந் நெல் இனத்திற்கு கழுத்து, இலை போன்ற பகுதிகளில் எரிபந்தம் என்னும் பங்கஸ் நோய் ஏற்பட்டுள்ளதால் ஆயிரக் கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நோய் ஏற்பட்டவுடன் நெற்பயிரின் தண்டு மற்றும் இலைகளை ஊடுருவி தாக்கக்கூடிய பங்கஸ் நாசினியை ஒட்டுத் திரவத்துடன் கலந்து விசுறுவதன் மூலம் இதை ஓரளவு கட்டுப்படுத்த முடி யும்.

இந்நெற் பயிர்ச்செய்கை தொடர்பாக வடமாகாண விவசாய அமைச்சு விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு பிரதேசங்களுக்கு ஏற்ற விளைச்சல் தரக்கூடிய நெல் இனங்களை ஆராய்ச்சி செய்து சிபாரிசு செய்து உதவ வேண்டுமென கமக்கார அமைப்பினரும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-15)

## அறநெறி பாடசாலை திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

இந்து சமயத்தின் பண்பாடுகளை சிறு வயதிலேயே தெரிந்து கொள்ளும் முகமாக அறநெறிப் பாடசாலை உருத்திரபுரம் பாளையடி அருட் செல்வ விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு கிளிநொச்சி திருநெறிக்கழகம் மற்றும் இந்து சமய ஆர்வலர்கள், சிவநகர், உருத்திரபுரம் வடக்கு மேற்கு கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


எனவே இப்பகுதியிலுள்ள அனைத்து சிறுவர்களையும் அறநெறிப் பாடசாலையில் இணைந்து கொண்டு தொன்மைமிக்க இந்து சமயப் பண்பாடுகளை வளர்ச்சியடையச் செய்ய வருகை தருமாறு ஆலயபரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

698



## கடோத்கஜன்

காலப்போக்கில் கடோத்கஜனுக்கு மேகவர்ணன், அஞ்சன்பர்வன் என்ற ஆண் பிள்ளைகள் பிறந்தனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு மகாபாரத யுத்தம் மூண்டபோது, பீமன் தன் மகனை மனதில் நினைக்க, உடனே கடோத்கஜன் அங்கு பறந்து வந்து விட்டான். கௌரவர்களைச் சேர்ந்த பகதத்தன ஒரு பெரிய யானைப் படைக்குத் தலைமை தாங்கி பாண்டவர்களின் படைக்கு பயங்கர சேதத்தை உண்டாக்கினான்.

ஓர் உயரமான யானையின் மீது அமர்ந்து அவன் நடத்திய பயங்கரத் தாக்குதலில், பாண்டவர்களின் படை வீரர்கள் சிதறியோடத் தொடங்கினர். அப்போது போர்க்களத்தில் நுழைந்த கடோத்கஜன் பகதத்தனை தைரியமாக எதிர்த்துப் போராடினான். இறுதியில் பகதத்தன் வீழ்ந்தான். அர்ஜுனனுடைய பிள்ளை ஐராவதன் போர்க் களத்தில் காயமுற்று மயக்கமானான். அப்போது அர்ஷிருங்கன் எனும் பகைவன் அவன் மீது வாளைப் பாய்ச்சிக் கொன்றான். அதைக் கண்டுக் கொதித்தெழுந்த கடோத்கஜன் பூதாகாரமாகத் தன் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டு கௌரவர்கள் மீது சீறிப் பாய்ந்தான்.

எதிர்ப்பட்ட துரியோதனனையே கடோத்



கஜன் தாக்கத் தொடங்கினான். இருவருக்குமிடையே கதை யுத்தம் தொடங்கியது. துரியோதனனை தனது சக்திவாய்ந்த கதையினால் கடோத்கஜன் அடிக்க, துரியோதனனுடைய நண்பனான வங்க மன்னன் குறுக்கே வர, துரியோதனன் தப்பினான்.

அவனுக்கு உதவி செய்ய அபிமன்யு அங்கே வர, மீண்டும் போர் தொடங்கியது. ஆனால் கடோத்கஜன் தன்னுடைய மாயவித்தைகளினால், கௌரவர்களைப்பின் வாங்கச் செய்தான்.

அதற்குள் பீஷ்மரின் ஆலோசனைப்படி, கடோத்கஜனை சமாளிக்க முடியாமல் துரியோதனன் திணறுவதைக் கண்ட பீஷ்மர் உடனே சோமதத்தர், சைந்தவர், துரோணர் ஆகியோரை அங்கு அனுப்பினார். அவர்கள் அனைவரும் சேர்ந்து கண்டோத்கஜனை சூழ்ந்து கொண்டனர்.

தன் மகனைப் பல பகைவர்கள் சூழ்ந்து கொண்டதைக் கண்ட பீமன் உடனே உதவிக்கு விரைந்தான். பீமனும், கடோத்கஜனும் அனைவரின் ஒருங்கிணைந்த தாக்குதலைத் தவிடு பொடியாக்கினர். துரியோதனன் கடோத்கஜனைத் தவிர்த்து பீமனை தாக்கினான். இருவருக்குமிடையே பயங்கர யுத்தம் மூண்டது. அதில் பீமன் காயமடைய, காயமுற்று வீழ்ந்த பகதத்தன் சுப்ரதீக் எனும் தனது யானையின் மீது அமர்ந்து போர்க்களத்தில் புகுந்து, கடோத்கஜனை எதிர்கொணடான். பகதத்தனாலும் அவனை சமாளிக்க இயலவில்லை. ஆகையால் பீஷ்மர தானே கடோத்கஜனுடன் போரிட முன் வந்தார்.

இதைக் கண்ட அர்ஜுனன் சிகண்டியுடன் அந்த இடத்திற்கு விரைந்தான். அர்ஜுனனைத் தாக்க முயன்ற பீஷ்மர் அவனருகில் சிகண்டி இருப்பதால் தனது ஆயுதங்களைப் பிரயோகிக்க விரும்பாமல் குழம்பினார்.

உடனே, கர்ணனை அந்த இடத்திற்கு அனுப்பினார். ஆனால், கர்ணனால் கடோத்கஜனின் சாகசங்களுக்கு ஈடு செய்ய முடியவில்லை. கர்ணனிடம் இந்திரனுடைய சக்தி வாய்ந்த அம்புகள் இருந்தன.

அவற்றை அர்ஜுனன் மீது மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்று கர்ணன் முன்னமே தீர்மானித்திருந்தான்.

ஆனால் கடோத்கஜனை உயிரோடு விட்டால், அவன் கௌரவசேனையையே அழித்து விடுவான் என்று தோன்றியது. அதனால் வேறு வழியின்றி, கர்ணன் இந்திரனுடைய ஆயுதத்தை கடோத்கஜன் மீது ஏவ, கண்டோத்கஜன் உயிர் நீத்தான்.

இவ்வாறு, கடோத்கஜன் தன் முடிவை சந்தித்தான். (முற்றும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2014 24

- 1679 - இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தான்.
- 1857 - தெற்காசியாவின் முதலாவது முழுமையான பல்கலைக்கழகம் கல்கத்தா பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது.
- 1887 - அபிசீனியப் படைகள் டொகாலி என்ற இடத்தில் இத்தாலியர்களைத் தோற்கடித்தனர்.
- 1897 - சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ் இந்துக் கல்லூரியில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.
- 1908 - பேடன் பவல் சாரணீய இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1918 - கிரெகோரியின் நாட்காட்டி ரஷ்யாவில் பெப்ரவரி 14 முதல் அறிமுகப்படுத்தப்பட இருப்ப தாக அறிவிக்கப்பட்டது.
- 1924 - ரஷ்யாவின் பெட்ரோகிராட் நகரம் லெனின்கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது
- 1927 - ஆல்பிரட் ஹிட்ச்கொக் தனது த பிளெஷர் கார்டன் என்ற தனது முதலாவது திரைப் படத்தை வெளியிட்டார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் தமது கசபிளாங்கா உச்சி மாநாட்டை முடித்துக் கொண்டனர்.
- 1972 - இரண்டாம் உலகப் போரில் காணாமற்போன ஜப்பானிய படைவீரனான சொயிச்சி யாக்கோய் என்பவன் குவாம் காடு ஒன்றில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டான்.
- 1978 - கொஸ்மொஸ் 954 என்ற சோவியத் செய்மதி பூமியின் வளிமண்டலத்துள் எரிந்து அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.
- 1984 - முதலாவது ஆப்பிள் மாக்கின்டொஷ் கணினி விற்பனைக்கு வந்தது.
- 1986 - வொயேஜர் 2 விண்கலம் யுரேனசின் 81, 500 கிமீ தூரத்துக்குள் வந்தது.
- 1993 - துருக்கிய ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஊகுர் மும்க்கு அங்காராவில் கார்க் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.
- 1996 - மாஸ்கோவுக்கு உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில் போலந்துப் பிரதமர் ஜோசப் அலெக்ஸ்கி தனது பதவியைத் துறந்தார்.
- 2007 - சூடானிலிருந்து 103 பயணிகளுடன் சென்ற விமானம் நடு வானில் கடத்தப்பட்டது.
- 2009 - இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட அரசுத்தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமற்போனார்.

### பிறப்புகள்

- 1924 - சி. பி. முத்தம்மா, இந்தியப் பெண் சாதனையாளர் (இ. 2009)

### இறப்புகள்

- 1965 - வின்ஸ்டன் சர்ச்சில், பிரித்தானியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1874)
- 1966 - ஹோமி பாபா, இந்திய அணு ஆராய்ச்சி நிபுணர் (பி. 1909)

### சி.பி.முத்தம்மா



கர்நாடகத்தில் குடகு மாவட்டத்தில் விராஜ் பேட்டையில் 1924 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி பொனெரி பெல்லியப்பா முத்தம்மா பிறந்தார்.

இவர் இந்தியக் குடியுரிமைப் பணித் தேர்வில் வெற்றியடைந்த முதல் பெண். இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத்துறை அதிகாரியாக 1949 இல் பணியில் சேர்ந்தவர். இந்திய ஆட்சிப் பணிகளில் பெண் அதிகாரிகளுக்கு எதிராக உள்ள விதிகளை மாற்றப் பாடுபட்டவர். 32 ஆண்டுகள் பணியின் பின்னர் இந்தியக் குடியுரிமைப் பணியில் இருந்து 1982 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

ஆண்கள் மட்டுமே ஆட்சி செய்துகொண்டிருந்த வெளியுறவுத்துறையில் பணிபுரிய விரும்பி அரசுபணித் தேர்வாணையம் நடத்திய தேர்வில் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று இந்திய வெளியுறவுத் துறை பணியில் சேர்ந்தார் முத்தம்மா. வெளியுறவுத் துறையில் பணிபுரியும் அளவு கடந்த ஆர்வத்தோடு பணியில் சேர்ந்த முத்தம்மா ஒவ்வொரு கட்டத்திலும் பலவிதமான பாலியல் பாகுபாடுகளுக்கு ஆளாக நேர்ந்தது.

வெளியுறவுத் துறையின் பணி விதிகள், "அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 14 மற்றும் 15 அரசுப் பணியில் இருக்கும் பெண்களுக்கெதிரான பாலியல் பாகுபாடு நிறைந்த - பெண்ணுரிமை மற்றும் சமத்துவம் ஆகிய பிரிவுகளுக்கு எதிராக இருக்கிறதென்றும், பெண் என்பதாலேயே பணியிலமர்வதற்கான உரிமை பாதிக்கப்படுவதென்பது அரசியல் சாசனத்திற்கெதிரானதென்றும் இந்தக் காரணங்களாலேயே தனது பதவி உயர்வு தடைபட்டிருக்கிறதென்றும் எனவே இந்த பால்பாகுபாடுகளைக் களைய நீதிமன்றம் உதவ வேண்டும் எனவும் கோரி சி.பி.முத்தம்மா உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், பாலியல் பாகுபாடு நிறைந்த விதிகள் நீக்கப்பட்டதாக வெளியுறவுத் துறையின் சார்பில் அளிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தை ஏற்றுக் கொண்டார். முத்தம்மாவின் தகுதி பதவி உயர்வுக்கு ஏற்றதாக இருக்கிறதென சொல்லி பதவி உயர்வு அளித்த வெளியுறவுத் துறை அவரை ஹேகில் இந்தியத் தூதராக நியமித்தது. வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இத்தீர்ப்பு ஆணாதிக்கக் கருத்துகள் கொண்ட விதிகள் திருத்தியெழுத வாய்ப்பாக அமைந்தது. இவர் 85 ஆவது வயதில் 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14 ஆம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்



போக முனிவர்

கல் விளக்கு

...இருக்கும் பத்துக்குடம் எண்ணெய் தீரும் வரை தீபம் எரிந்து அதற்குப் பின் எண்ணெய் இல்லாது அணைந்து புகைந்தது. உடனே ஒரு குழந்தை இறந்தது.

குழந்தை இறந்ததைக் கண்ட மாதேவி அழுது துடித்தாள். அவளைத் தேற்றிய மாலினி முனிவர், மாதேவி வணிகனாகிய ஒரு குழந்தை நாம் கொடுக்க வேண்டிய கடனை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டது. இனி நமக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காக ஒரு குழந்தை காத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் குழந்தை வளர்ந்து ஆளாகி ஆயிரம் பொன்னைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டுத்தான் உயிர் துறக்கும்.

ஆகையால் இக்குழந்தை வளர்ந்து பெரியவனானதும் சம்பாத்தியம்செய்து எந்தப் பொருளைக் கொண்டு வந்து கொடுத்தாலும் நீ உன் கைகளால் அதனை வாங்காதே என்று எச்சரிக்கை செய்துவிட்டு தவத்தில் அமர்ந்தார்.

மகாதேவியும் அக்குழந்தைக்கு தேவநாதன் என்று பெயரிட்டு ஆகம, தேவ, புராணி சாஸ்திரங்களையும் கற்பிக்கச் செய்தாள்.

பதினாறு வயது பருவத்தில் கற்க வேண்டிய வித்தைகளெல்லாம் கற்று தேவநாதன் இரசவாத வித்தையால் பல மூலிகைகளைக் கொண்டு பொன் செய்யும் வித்தையையும் கற்றான். ஒருநாள் தன் இரசவாதத் திறமையால் உருவாக்கிய பொன்னை தன் தாயிடம் கொடுக்கவர அவளும் முன்பொரு நாள் தன் கணவன் சொன்ன சொல் நினைவுக்கு வரவே, அப்பா நீ உற்பத்தி செய்கிற பொன்னை நீயே ஒரு தனி இடத்தில் பத்திரமாக வைத்துக்கொண்டு வேண்டிய போது எடுத்து செலவு செய்துகொள் என்று கூறினாள்.

மகனும் மறுமொழி சொல்லாமல் தாய் சொன்னபடியே செய்தான். ஒருநாள் தேவநாதன் சிறிது பொன்னை எடுத்து உருக்கி விசித்திர வேலைப் பாட்டுடன் கூடிய கிண்ணம் ஒன்றைச் செய்து தன் தாயிடம் பாராட்டைப் பெறுவதற்காகத் தூங்கிக்கொண்டிருந்த அவளை எழுப்பி அம்மா இதோ பாருங்கள். எவ்வளவு வேலைப்பாட்டுடன் கூடிய கிண்ணம் ஒன்றைச்செய்து வந்திருக்கிறேன் என்று காட்ட அவளோ தன் கணவன் சொல்லியிருந்த எச்சரிக்



ஊரோம முனிவர்

கையை மறந்து அதனை கையில் வாங்கிப் பார்த்தாள்.

அவள் பொற்கிண்ணத்தைக் கரத்தில் பெற்றவுடனே எதிரே நின்ற தேவநாதன் தனக்கு ஏதோ மயக்கம் வருவதாகக் கூறி கீழே விழுந்து மூர்ச்சித்து உயிர் துறந்தான்.

மகாதேவியின் அழுகுரலைக் கேட்டுக் கண்விழித்த மாலினி முனிவரும் தன் மனைவியிடம், தேவி நான் முன்பு உனக்குச் சொன்ன வார்த்தையை மறந்து மதி மோசம் போய்விட்டாயே. இனி நீ அழுது புலம்புவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று ஆறுதல் சொல்லி தம் புத்திரருக்குச் செய்ய வேண்டிய இறுதிக்கடனைச் செய்து முடித்தார்.

இப்படியாக மாலினி முனிவர் முன்ஜென்மத்தில் பட்ட எண்ணெய்க் கடனைத் தீர்ப்பதற்கு அமைத்த கல்விளக்குதான் அது என்று கல் விளக்குக்கான கதையைத் தலபுராணம் தெரிவிக்கிறது.

மாலினி முனிவர் அமைத்த அந்தப் பெரிய கல் விளக்கு இன்றும் உரோ

## ஆன்மீகம் 12

மரிஷி வனத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதே உரோமரிஷி வனத்தில் சப்த கன்னியர்கள் நீராடிச் சென்ற திருமஞ்சனப்பொய்கை என்ற குளமும் இருக்கிறது. பார்வதி தேவிக்காக மலர்களைப் பறித்துச் செல்ல வரும் சப்த கன்னியர்கள் இப்பொய்கையில் நீராடிச் செல்வார்களாம்.

ஒருநாள் இந்த வனத்தில் வேட்டையாடுவதற்கு வந்த அரசனும் அவனது படைகளும் களைப்பின் மிகுதியால் இந்தப் பொய்கையில் நீராடிச் செல்ல தண்ணீர் கலங்கி சேறாகி விட்டது.

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி



# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

ஈழத்தமிழர் விடுதலைக்கு இதயம் தந்த இமயம்!



இசையமைப்பாளர்
எஸ்.எம்.சுப்பையா நாயுடு

24

இரண்டொரு நாளில் ராகவன் வந்தார். சபாஷ் மாப்பிள்ளை கதை சொல்லி படப்பிடிப்பைத் துவங்கினார்.

பேண்ட, ஸ்லாக் போட்டு நடித்தார் செம்மல். நல்லா இருக்கா? என்றும் பலரைக் கேட்டார்...

அப்போது பேண்ட், ஸ்லாக் அணிந்து நடிக்கும் வெளிப்புறக் காட்சிகளுக்கு வெட்கப்பட்டார். அதனால் படப்பிடிப்பை மும்பைக்கு மாற்றினார் தயாரிப்பாளர். கூட நடித்தவர் தயாரிப்பாளரின் மனைவி மாலினி.

அடுத்து வந்த படம் திருடாதே. இந்தப் படம் ஹிந்தி கதை பாக்கட்மார். இதைக் கவியரசனின் அண்ணன் ஏ.எல்.சீனிவாசன் எடுத்தார். என்னையும் கண்ணதாசனையும் சேர்ந்தே எழுதச் சொன்னார். இதற்கு முன் கலையரசி படத்தை எழுதச் சொன்னார். எனக்கு இந்த சந்திர மண்டலம் செவ்வாய் மண்டல விவகாரமெல்லாம் புரியாது. நான் திருடாதே எழுதுகிறேன். கலையரசி உமக்கு என்று பிரித்துக்கொண்டோம்.

திருடதே படத்தில் சரோஜா தேவி நடித்தார்.

அதன்பின் ஆனந்த ஜோதி படத்தில் தேவிகா அவரோடு நெருங்கி நடித்தார். கைவிலங்கு



போட்ட காதல் சீன்கள் பிரமாதம்!

தாய்க்குப்பின் தாரம் படத்துக்குப் பிறகு தேவருடன் மனஸ்தாபம் கொண்டார். அதில் பல காரணங்கள். பின்னர் கொங்கு நாட்டுத் தங்கத்துக்குப் பிறகு தாள முடியாத நஷ்டம் காரணமாக அசோகன் கேட்டுக் கொண்டபடி தேவர் திரும்ப செம்மலிடம் வந்தார். விலகிய நட்பு கூடியது. பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்ந்தனர்.

திரையுலகமே வியக்கும் அளவுக்குத் தாய் வரிசையில் படங்கள். அதில் செம்மலுக்குச் சிரமமே இருக்காது. தேவா, செம்மல் இல்லாத பாகங்களை முதலில் எடுத்து விடுவார். பின்னர் செம்மலை நடிக்க வைப்பார். 15 நாளைக்கு மேல் வேலை இருக்காது. தேவரின் நிர்வாக சுறுசுறுப்பில்... நேரடி கண்காணிப்பில் இரட்டிப்பு வேலை முடியும். படமும் வெற்றியை நோக்கும்.

செம்மலின் வாழ்க்கை திருப்பத்துக்கு எங்க வீட்டுப் பிள்ளை ஒரு முக்கிய படம்.

அப்படத்தைத் தமிழில் நாகிரெட்டி அவர்கள் எடுத்தார்கள். அதன் இயக்குநர் சாணக்யா, இவர் தான் வஹிதா ரஹ்மானை காலம் மாறிப் போச்சு படத்தில் அறிமுகப்படுத்தியவர்.

அவரிடம் செம்மலை வைத்து இப்படம் எடுக்கப்போவதாகச் சொன்னதும் "நேட்டிவிட்டி மாற்றணும். அது என்.டி.ஆர். அவர்களின் ரசிகருக்குள்ள படம். இதை எம்.ஜி. ஆர் ரசிகர்களுக்கு ஏற்ப மாற்ற வேண்டும். அதுதெலுங்கு. அது தமிழ். நாட்டுக்கு நாடு உணவு மாறுகிறது. சோறு ஒன்றாகவே இருக்கும். சோற்றிலுள்ள குழம்பு பதார்த்தம் மாறும். அப்படித்தான் கதை ஒன்று தான். அதை வெளிப்படுத்தும்முறை வேறு. ஏனெனில் மக்களுக்கு நாக்கில் மட்டும் ருசி கிடையாது. நெஞ்சிலும் உண்டு" என்று சொன்னார்.


"நூற்றுக்கு நூறு சரி" என ஆமோதித்தார் செம்மல். அதில் இன்னொரு நாயகி ரத்னா. ஜி.வரலட்சுமியின் அக்காள் மகள். முதல் நாள் படப்பிடிப்புக்கு ஜி.வரலட்சுமி வந்த போது செம்மலைப் பார்த்து.... "என்னோடு குலேபகாவலியில் ஹீரோவாக நடித்தீர்கள். இப்ப என் மகளோடு நடிக்கிறீர்கள். யாரு கண்டா... என் பேத்தியோடும் ஹீரோவாக நடிச்சாலும் நடிப்பீங்க" என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஈழப்போருக்கு அரசாங்கம் தயாராகாவிட்டால் புலிக்கொடி பறக்கும்

## அமைச்சர் வீரவன்ச ஆவேசம்



(கொழும்பு)

**இரண்டாம் ஈழப்போரை ஆரம்பிக்கும் வகையிலேயே ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டின் தீர்மானம் அமையப்போகின்றது. இரண்டாம் ஈழப்போருக்கு சிங்கள மக்களும், அரசாங்கமும் தயாராக வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். தேசிய சுதந்திர முன்னணியால் கொழும்பு கெம்பல் பாக் மைதானத்தில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஜெனீவா மனிதவுரிமைகள் மாநாடு இலங்கைக்கு தூக்குக் கயிறாகவே அமையும். இது இடம்பெற்றால் இலங்கையில் சிங்கள இனம் அழிக்கப்படும்.

ஜெனீவா மனிதவுரிமைகள் மாநாடு சர்வதேச ஒத்துழைப்புடன், இலங்கைக்கு எதிரான செயற்றிட்டத்திலேயே இடம்பெறுகின்றது. இலங்கையின் வெற்றியை தடுத்து விடுதலைப் புலிகளை அழித தமையை பழிவாங்கும் நோக்குடனேயே ஜெனீவா மனிதவுரிமைகள் மாநாடு இடம்பெறுகின்றது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றிணைந்து நடத்திவரும் நாடகத்தை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற முப்பது வருடகால யுத்தத்தில் இலங்கை வாழ் சிங்களவர்கள் பலவற்றை இழந்து விட்டனர்.

வடக்கில் இருந்த சிங்களவர்கள் விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர், பலர் கொல்லப்பட்டனர், இவற்றை எந்தவொரு அமைப்பும், மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கவனத்திற் கொள்ளவில்லை.

மேற்குலக நாடுகளின் ஆதிக்கத்தை இலங்கை மீது செலுத்தி இலங்கையை அமெரிக்க கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவே ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு முயற்சிக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் விடுதலைப்புலி இயக்கத்தை அழித்து ஆட்சி அமைக்கவும், கொத்து குண்டுகளின் மூலமும், கிபிர், வான் தாக்குதல் மூலமும் வடக்கை கைப்பற்றும் சிந்தனையை அமெரிக்காவே வழங்கியது. 2001 ஆம் ஆண்டு அமெரிக்க அறிக்கையில் இச் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஆனால், இன்று எமது அரசாங்கத்தின் மீதும், இராணுவத்தின் மீதும் வீண்பழி சுமத்தி சர்வதேச விசாரணைகளில் சிக்கவைக்கின்றது.

விடுதலைப் புலிகளை தோற்கடித்த நாம் இன்று சர்வதேச மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தீய சக்திகளின் இரண்டாம் ஈழப்போருக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாகவே வட மாகாண சபைத் தேர்தலும், கூட்டமைப்பின் வெற்றியும் அமைந்தது. தற்போது ஜெனீவா பேச்சு வார்த்தைகள் மூலம் தனித் தமிழீழத்தை உருவாக்கி இலங்கையில் மண்டுமொரு போராட்டத்தை ஆரம்பிக்க திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வடக்கில் உள்ள இராணுவத்தினரை வெளியேற்றி, 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் திட்டம் கூட்டமைப்பினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாம் ஈழப்போரின் போது இலங்கையை காப்பாற்ற சிங்கள பௌத்த மக்களும், அரசாங்கமும் தயாராக வேண்டும். இல்லையேல் நாட்டில் மீண்டும் புலிக்கொடி பறக்கும் சூழல் ஏற்படும். அரசாங்கத்தின் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி நாட்டில் பிரிவினையை உருவாக்கும் வேலைத் திட்டம் ஆரம்பமாகி விட்டது.

நாடடின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் மேற்கத்தேய நாடுகளுடன் இணைந்து இலங்கைக்கு எதிரான் தேசத்துரோக செயலில் ஈடுபட்டுள்ளனர். அன்று அரசாங்கத்தை ஆதரித்து யுத்தத்தை முறியடிக்க தந்திரமாக செயற்பட்ட கட்சிகள் இன்று சர்வதேச சக்திகளுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அரசாங்கம் இன்று தனியாக்கப்பட்டு விட்டாலும் அரசாங்கத்திற்கு மக்கள் பலம் இருக்கின்றது. சிங்கள மக்கள் அனைவரும் தமிழ் பிரிவினை சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும்.

இவ் விடயத்தில் மக்கள் தாமதித்தால் எதிர்காலத்தில் இலங்கையில் சிங்கள இனமே அழிந்து விடும். எனவே, எதிர்வரும் தேர்தல்களில் சிங்கள மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார்

பாப்பாண்டவர் பிரான்சிஸ் இவ்வாண்டு இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இலங்கை அரசாங்கம் பாப்பாண்டவர் பிரான்சிற்கு அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பு தொடர்பில் 2015 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு பாப்பாண்டவர் விஜயம் செய்வர் எனவும், எனினும் இந்த ஆணடில் விஜயம் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் வத்திக்கான் பேச்சாளர் வணக்கத்திற்குரிய பெட்ரிக்கோ லம்பார்டி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஓகஸ்ட் மாதம், இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பாப்பாண்டவரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். எழுத்து மூலமாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த நவம்பர் மாதம் வத்திக்கானுக்கு விஜயம் செய்திருந்த இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் பாப்பாணடவரைச் சந்தித்து ஜனாதிபதியின் அழைப்பு குறித்து அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



யாழ்.குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் ஓம் நமசிவாய ஆன்மீக வங்கியூடாக சேகரிக்கப்பட்ட மந்திரச் சுவடிகளைக் கணக்கெடுப்பதைப் படத்தில் காணலாம்.

## ஏவுகணை ஆயுதத்தை மன்றில் சமர்ப்பிக்குக

### நீதிமன்றம் உத்தரவு

போர் நடைபெற்ற காலத்தில் ஏவுகணை தாக்குதல் நடத்தி விமானம் ஒன்றை வீழ்த்திய சம்பவம் தொடர்பில், விமானத்தை வீழ்த்த பயன்படுத்தப்பட்ட ஏவுகணை ஆயுதத்தை நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மேல் நீதிமன்றம், கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

குறித்த ஆயுதத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தின் நீதிபதி பிரேமா ஸ்வர்ணதிதி உத்தரவிட்டார்.

அத்துடன் ஏவுகணை செலுத்த பயன்படுத்திய ஆயுதம் தொடர்பான அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கையையும் அன்றைய தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

2000 ஆம் ஆண்டு வில்பத்து வனப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் எண்டனோ 32 ரக விமானம் வீழ்த்தப்பட்டதுடன் அதில் பயணித்த 37 பாதுகாப்பு படையினர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் இருவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றம் வழக்கு விசாரணைகளை பெப்ரவரி மாதம 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அதுவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டது. (அ-2)

## இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது

### அமைச்சர் பீரிஸ் கொதிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் இலங்கை ஏனைய நாடுகளைப்போல் சமமாக நடத்தப்படவில்லை. அத்துடன் இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணை நிலைமையை மோசமாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போருக்கு பின்னர் இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகளை கவனிக்காமலேயே சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன.

இதேவேளை, நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவின் சில நிறுவனாங்கள், இலங்கையில் தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளன என்றும் அவா குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை அத்துமீறும் மீனவர்கள் கைது செய்யப்படுவர்

## அமைச்சர் ராஜித திட்டவட்டம்



**(கொழும்பு) இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரையில் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படு வார்கள். அதேபோல் இலங்கை மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது என கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

கடற்றொழில் நீரியல்வள அமைச்சினால் நேற்று முன் தினம் அரசாங்க தகவல் திணைக்களத் தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள இந்திய- இலங்கை இணைப்பு இணக்க குழு சந்திப்பின் போது மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் தீர்மா ணங்கள் எடுக்கப்படும்.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைகள் மற்றும் கைது செய் யப்பட்டுள்ள இருநாட்டு மீனவர் களை விடுவிக்கும் முகமாக இந்தி யாவில் சந்திப்பினை மேற்கொண்டி ருந்தோம்.

இதன் போது மீனவர் பிரச்சினை, மீன்பிடி எல்லைகள் தொடர்பில் தீர்வுகள் மற்றும் தற்காலிக இணக் கப்பாடு காணப்பட்டதுடன், கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர களும் விடு விக்கப்பட்டுள்ளனர்.

அதே போல் இலங்கை கடற்ப ரப்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் விடு தலை செய்துள்ளோம்.

இலங்கை கடற்பரப்பில் இந்திய விசைப்படகுகள் மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்ப டுத்துவ்து தொடர்பிலும் முறைப் பாடுகளை செய்துள்ளதோடு, இந்திய மீனவர்களின் அத்துமீறல் கள் தொடர்பிலான புகைப்படங் களையும் இந்திய அரசிடமும், மீனவ சங்கங்களிடமும் காட்சிப்ப டுத்தியுள்ளோம்.

தற்போதும் இருநாட்டு மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று தற்கா லிகத் தீர்வு காணப்பட்டுள்ள நிலை யிலும் இந்திய மீனவர்கள்.

தொடர்ந்தும் இலங்கைக் கடற் பரப்பில் அத்து மீறிய மீன்பிடியி னையே மேற்கொண்டு வருகின்ற னர்.

இவை தொடர்பில் நிரந்தர தீர்வு இரு நாடுகளுக்கிடையில் காணப்ப டும்வரையில் இலங்கை கடற்பரப்பில அத்துமீறும் இந் திய மீனவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அவர்கள் சட்ட விரோத மீன்பிடி யினை மேற்கொள் வதை உடன டியாக நிறுத்திக் கொள்ள வேண் டும்.

அதுபோல் இலங்கை மீனவர்க ளும் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடக் கூடாதெனவும் எச்சரிக்கப் பட்டுள்ளது.

வடமாகாணத்தில் மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் தென் இந்தியசந்திப்பின் போது வெளிப்ப டுத்தவுள்ளமையும், குறிப்பிடத் தக்கது.

குறிப்பாக அரசாங்கத்தின் பிரதிநிதிகளும், வடக்கில் மன்னார், யாழ்ப் பாணம், முல்லைத்தீவு மீன வர் சங்கத் தலைவர்கள் உட்பட பல பேர்கொண்ட குழுவினர் தென் இந்தியாவிற்கான விஜயத்தினை மேற்கொள்கின்றனர்.

அதேபோல் அடுத்த மாதம் இலங்கையில் இடம்பெற விருக்கும் இந்திய இலங்கை இணைப்பு இணக்கக்குழு சந்திப்பின் போது மீனவர்கள் தொடர்பில் மேலதிக தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

அத்தோடு மீனவர்கள் தொடர்பிலான சட்டதிட்டங்களும் அடுத்த மாதத்துடன் அமுல்படுத் தப்படவுள்ளது.

குறிப்பாக மீன் வளத்தினை அழிக்கும் விசைப் படகுகள், மற் றும் தடை செய்யப் பட்ட வலைகள், மோட்டார் இயந்திரங்கள் தடை செய்யப்படவுள்ள அதேவேளை சர்வதேச மீன்பிடி சட்டங்களை மீறும் மீனவர்களுக்கு மில்லியன் அமெரிக்க டொலர்கள் தண்டப் பணம் அல்லது ஓர் ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)






சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புதிய மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வை யும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

## சபை அமர்வை ஒளிபரப்புவது குறித்து சபையில் குழப்பநிலை

(கொழும்பு)

இலங்கையின் நாடாளுமன்ற அமர்வை தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்புவது இடை நிறுத்தப்பட்டமை தொடர்பில் பாராளு மன்றத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

கடந்த வரவு செலவுத்திட்ட அமர் வின் போது ஒளிபரப்பப்பட்ட பாரா ளுமன்ற அமர்வு தற்காலிக பரீட் சார்த்த நேரடி காட்சிகள் தொடர்பில் மறுபரிசீலனை செய்யப்படவுள்ள தாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்த ஒளிபரப்பு நிறுத் தப்பட் டமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கேள்வியெழுப்பிய போதே சந்திம வீரக்கொடி இந்த அறிவிப்பை விடுத்தார்.

இந்த ஒளிபரப்பை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்த போது அதனை தற்காலிக பரீட் சார்த்த ஒளிபரப்பு என்று கூற வில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துரைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க ஆகி யோர் தொலைக்காட்சி ஒளிபரப்பு தொழில்நுட்ப பிரச்சினை காரண மாகவே நிறுத்தப்பட்டதாக அறிவிக் கப்பட்டமையை சுட்டிக்காட்டினர்.

இது பொதுமக்கள் தகவல் அறி வதை தடுக்கும் செயல் என்று அநுரகு மார திஸாநாயக்க குற்றம் சுமத்தி னார்.

இந்தநிலையில் வெளிநாடு சென்றுள்ள சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் இது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று பிரதி சபாநாயகர் குறிப்பிட் டார். (அ-2)

## பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறைமன் றம் யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலைய ஆதரவுடன் யாழ்.காங்கேசன் துறை வீதி சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் சனி, ஞாயிற் றுக்கிழமைகளில் பிற்பகல் 4.30 மணி முதல் வட இலங்கை சங்கீத சபையின தும் அகில இலங்கை திருமுறை மன்றத் தினதும் பாட விதானங்களுக்கு அமை வாக இலவசத் தேவார பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றது.

அத்தோடு கொழும்புத்துறை சிவ தொண்டன் நிலைய மகளிர் ஆச்சிரமத் திலும் இவ் இலவசப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மாலை 5 மணி முதல் நடைபெற்று வருகின்றது.

இதற்கான ஏற்பாட்டை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி மேற் கொண்டுள்ளார். (அ)

## முதியோர் சங்க பொதுக் கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங் கத்தின் இவ்வாண்டுக்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத் தில் நடைபெறும் என சங்கத்தின் செய லாளர் அறிவித்துள்ளார். (அ-2)

## தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்ய அரசாங்கம் சதித்திட்டம்

### ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பிரதிநிதித் துவத்தை இல்லாமல் செய்யும் சதித் திட்டமொன்றை அரசாங்கம் முன் னெடுத்து வருவதாக ஐக்கிய தேசியக கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் ஆர்.யோகராஜன் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

சில கட்சிகளுக்கு பணம் வழங்கி தேர்தலில் போட்டியிடச் செய்ய அர சாங்கம் முயற்சித்து வருகிறது. தேசிய தொழிலாளர் ஒன்றியம், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி போன்ற கட்சி களை தனித்து போட்டியிடச் செய்து அதன் மூலம் வாக்குகளை சிதறி டிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சதி வலையில் தமிழ் மக்கள் சிக்கிவிடக் கூடாது.

இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் கூட தனித்து போட்டியிடத் திட்டமிட்டுள்ளது. தேர்தல் முடிவுகள அறிவிக்கப்பட்டதன் பின்னரே தாம் இழைத்த தவறினை குறித்த கட் சிகள் உணர்ந்து கொள்ளும் 2009ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் மலை யக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தேசிய தொழிலாளர் ஒன்றியம் ஆகியன தேர்தலில் தனித்து போட்டியிட்டு தோல்வியடைந்துள்ளன.

எனினும், 2013ஆம் ஆண்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற் றும் ஜனநாயக மக்கள் முன் னணி ஆகியன இணைந்து போட்டியிட்டு இரண்டு ஆசனங்களை வென்றுள் ளன என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "டெல்லி முற்றுகை" இந்திய தேசியக் கட்சிகள் கண்டுகொள்ளாத இலங்கைத் தமிழர் பிரச்சினை



"குடியரசுத் தலைவர்" பதவிக்கு நடைபெறும் தேர்தல்போல் இந்தியாவின் 16ஆவது நாடாளுமன்றத் தேர்தல் மாறி வருகிறது. ஆட்சியைப் பிடிக்க நினைக்கும் பாரதீய ஜனதாக் கட்சியும், ஆட்சியை தக்கவைக்க நினைக்கும் காங்கிரஸ் கட்சியும் களத்தில் நேருக்கு நேராக மோதிக் கொண்டிருக்கின்றன.

, இந்தியாவின் தலைநகரான டெல்லியில் இருநாட்கள் காங்கிரஸ் கட்சி, தன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டியது. அனைத்து மாநிலங்களில் இருந்தும் அக்கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். அதற்குப் போட்டியாக பா.ஜ.க.வும் டெல்லியில் தனது தேசிய கவுன்சில் கூட்டத்தை இரண்டு நாட்கள் நடத்தியது.

சமீபத்தில் வெற்றி பெற்ற மாநில முதல்வர்கள் சிவராஜ் சிங் சவுகான், ராமன்சிங், வசுந்தரராஜே உள்ளிட்ட அனைத்து பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வர்களும், அனைத்து மாநில பா.ஜ.க. நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள். கடந்த பத்து மாதங்களில் டெல்லியில் கூட்டப்பட்ட இரண்டாவது தேசிய கவுன்சில் கூட்டம் இது.

இந்திய நாடாளுமன்றத்திற்கு உள்ள 543 எம்.பி.க்களில் 272 எம்.பி.க்களை பெற்றுவிட வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் இலக்கு. அதன் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடியின் பிரச்சாரமே "272-ப்ளஸ்" என்ற பிரச்சாரம்தான். அவர் மட்டுமல்ல, அக்கட்சியின் தலைவர் ராஜ்நாத்சிங் உள்பட அனைவருமே இதை மனதில்நிலை நிறுத்தி, "ஒரு ஓட்டு.: ஒரு நோட்டு" என்ற பிரச்சாரத்தை மேற்கொள்கிறார்கள். இதற்கு முன் "வீடுதோறும் தாமரை" பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள்.

"தாமரை" பா.ஜ.க.வின் தேர்தல் சின்னம் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த பிரச்சாரம் ஒரு புறமிருக்க, தேர்தல் நிதி திரட்டுவதற்காக இப்போது "ஒரு ஓட்டு. ஒரு நோட்டு" பிரச்சாரத்தை கையிலெடுத்துள்ளார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியோ இன்னும் அது போன்றதொரு "அகில இந்திய அளவிலான" தேர்தல் பிரச்சாரம் எதையும் எடுக்காமல் வெறுமனே "நாங்கள் சாதனை செய்தோம்" என்று மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறது. பா.ஜ.க.வின் தேர்தல் யுக்தி ஆரம்பித்து ஒரு ரவுண்ட் சென்றுவிட்டு இப்போது அடுத்த யுக்தியும் துவங்கிவிட்டது. ஆனாலும், காங்கிரஸ் கட்சி இன்னும் "சாதனைப் பிரச்சாரத்தை"யே மேற்கொள்ளவில்லை. இனி எஞ்சியிருக்கும் இரு மாதங்களில் காங்கிரஸால் தன் சாதனை சரித்திரத்தை சந்து பொந்துக்கெல்லாம் கொண்டு சென்றுவிட முடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

பா.ஜ.க.விற்கு இப்போது "ஸ்டார் பிரதமர் வேட்பாளர்" நரேந்திரமோடி. ஆனால், அவர் தன் கட்சியின் அடிப்படைக் கொள்கையான "ராமர் கோயில் கட்டுவது", "காஷ்மீருக்கு சிறப்பு அதிகாரம் வழங்கும் அரசியல் சட்டப் பிரிவு 370 நீக்குவது", "பொது சிவில் சட்டம்" போன்றவை பற்றி வாய்திறக்க மறுக்கிறார். ஏன் உத்தர பிரதேசத்தில் கலந்துகொண்ட கூட்டத்திலும் மோடி இது பற்றி பேசவில்லை. டெல்லியில் நடைபெற்ற தேர்தலுக்கு முன்பான தேசிய கவுன்சில் கூட்டத்திலும் இதுபற்றி கருத்துச் சொல்லவில்லை. "வளர்ச்சி", "ஊழல் ஒழிப்பு", "பொறுப்புள்ள அரசு நிர்வாகம்" என்ற ரீதியில் மட்டுமே "நான் பார்க்கும் ஐடியல் இந்தியா" என்று கருத்துக்களை வெளியிட்டுள்ளார். பா.ஜ.க.வின் தலைவர் ராஜ்நாத் சிங கூட இது பற்றி மௌனம்சாதித்துள்ளார். அவரும் கூட மோடி போலவே பேசியிருக்கிறாரே தவிர, பா.ஜ.க.வின் அடிப்படைக் கொள்கை பற்றி பேசவில்லை.

இந்த சூழ்நிலையில் பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையிலாவது அந்த அடிப்படைக் கொள்கைகள் இடம் பெறுமா? அல்லது ஏற்கனவே 1999 களில் வெளியிடப்பட்ட "சென்னை பிரகடனம்" அடிப்படையில் இந்த "அடிப்படைக்கொள்கைகளுக்கு" கொஞ்ச காலம் ஓய்வு கொடுக்கப்படுமா என்பது தெரியவில்லை. அதனால் பா.ஜ.க. தனது அடிப்படைக்கொள்கைகளையே ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தியாவின் வளர்ச்சி என்ற கோணத்தில் தேர்தலை சந்திப்பது வாக்காளர்களை வசீகரப்படுத்தவே என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

குறிப்பாக இளம் வாக்காளர்களை மனதில் வைத்தே இப்படியொரு "கொள்கை விலகல்" முடிவை எடுத்து அக்கட்சியின் தலைமை செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆட்சியைப் பிடிக்க நினைக்கும் பா.ஜ.க. "எங்கள் கொள்கைகளை கிளற மாட்டோம்" என்று வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஆனால் மௌனமாக வெளிபடுத்துகின்றன. அதுதான் நரேந்திரமோடி, ராஜ்நாத்சிங் போன்றோரின் பேச்சுக்களிலும், அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அரசியல் தீர்மானத்திலும் எதிரொலிக்கிறது.

ஆனால், இந்த சிக்கல் காங்கிரஸ் கட்சிக்கு இல்லை. அவர்கள் தங்கள் கொள்கை என்ன என்பதை வெளிப்படையாக தீர்மானத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அக்கட்சி வெளியிட்டுள்ள 23 தீர்மானங்களில் ஒன்றில், "இப்போது நடக்கும் தேர்தல் இரு சித்தாந்தங்களுக்கு இடையே நடக்கும் மோதல். ஒன்று இந்தியாவை ஒற்றுமையாக வைத்துக் கொள்வது. அது காங்கிரஸுடையது. இன்னொன்று இந்தியாவை பிரித்தாளுவது. அது பா.ஜ.க.வுடையது. நாம் மதசார்பற்ற தன்மைக்கு உறுதி பூண்டுள்ளோம். பா.ஜ.க.வோ மதவாதத்திற்கு துணை போகிறது" என்று பளிச்சென வெளியிட்டுள்ளார்கள்.

ஆகவே மதசார்பற்ற இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பது காங்கிரஸின் இலக்கு. இந்த அடிப்படைக் கொள்கைக்கு கைகொடுக்க நினைக்கும் அரசியல் சக்திகளும், சமூக சக்திகளும் காங்கிரஸுடன் வர வேண்டும் என்று மனம் திறந்த அழைப்பு ஒன்றை கூட்டணிக் கட்சிகளுக்கு விடுத்துள்ளது. பத்து வருட காலம் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி இந்த அடிப்படையில் கூட்டணிக் கடசிகளை பேணிப் பாதுகாக்கவில்லை. ஆனால், மீண்டும் தேர்தல் என்று வந்தவுடன் இப்போது மதசார்பின்மையைக் காட்டி மற்ற கூட்டணிக் கட்சிகளையும், அரசியல் கட்சிகளையும் காங்கிரஸ் அழைக்கிறது என்ற எண்ணமே பல்வேறு மாநிலக் கட்சிகள் மனதில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒருபுறம் தனது அடிப்படைக் கொள்கைகளை மறைத்து வைத்துவிட்டு ஆட்சிக்கு வர பிரச்சாரம் செய்யும் பா.ஜ.க., இன்னொரு பக்கம் தனது அடிப்படைக் கொள்கைகளை வெளியிட்டு ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிசெய்யும் காங்கிரஸ் கட்சி. இதுதான் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்நோக்கியுள்ள பரபரப்பான களம்.

இந்தக் களத்திற்கு ஏற்றவாறு காங்கிரஸ் கட்சி தனது பத்தாண்டு கால ஆட்சியின் சாதனைகளை பட்டியலிட்டுள்ளது. எடுத்த எடுப்பிலேயே பிரதமர் மன்மோகன் சிங்கை பாராட்டி விட்டது. அவரது புத்தி கூர்மையான ஆட்சியால் பொருளாதார ரீதியாக இக்கட்டான காலகட்டத்திலும் சிறப்பாக ஆட்சி செய்துள்ளார் என்று புகழ்ந்திருக்கிறது. அதேபோல் அவர் "ஏழ்மையை விரட்டப் போராடுகிறார்" "பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்த நடவடிக்கை எடுக்கிறார்" என்றெல்லாம் பாராட்டியிருக்கிறது. தகவல் பெறும் உரிமை சட்டம், ஊழலை ஒழிக்க வந்த லோக்பால் சட்டம், கிராமப் புற மக்களுக்காக கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி கிராம வேலை வாய்ப்புத் திட்டம், உணவுக்கு உரிமை சட்டம், கல்வி பெறும் உரிமை சட்டம் என்று பலவற்றை அக்கட்சி தனது அரசியல் தீர்மானங்களில் விளக்கிச் சொல்லியிருக்கிறது.

அதுதவிர "ஊழல்" என்பது காங்கிரஸுக்கு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டது என்பதால், அந்த ஊழலை ஒழிக்க கொண்டு வந்த சட்டங்கள், இன்னும் பாராளுமன்றத்தில் நிலுவையில் உள்ள ஆறு ஊழல் ஒழிப்பு தொடர்பான மசோதாக்களை நிறைவேற்றுவது போன்றவை பற்றியும் பிரகடனம் செய்திருக்கிறார்கள். இதன் அடிப்படையில், "மதசார்பற்ற தன்மையைக் காப்போம்", "வளர்ச்சியுடன் கூடிய சமூக நீதி வழங்குவோம்", "வெளிப்படையான, பொறுப்புள்ள அரசாங்கத்தை அடுத்த ஐந்தாண்டுகளுக்குக் கொடுப்போம்" என்பதுதான் காங்கிரஸ் கட்சி முன் வைத்துள்ள தேர்தல் யுக்தி. இதை பிரச்சாரம் செய்யவே ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் பிரச்சாரக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பா.ஜ.க.வைப் பொறுத்தமட்டில் காங்கிரஸ் அரசின் ஊழல் புகார்கள் பற்றி உரக்கப் பேசியிருக்கிறார்கள். இந்த பத்தாண்டுகளில் 5.5 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றுள்ளதாக குற்றம் சாட்டியிருக்கிறது. பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இருந்த 8 சதவீத பொருளாதார வளர்ச்சியை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 5 சதவீதத்திற்கு கொண்டு வந்துவிட்டது என்று சாடியிருக்கிறார்கள். வெளியுறவுக் கொள்கையில் தடுமாற்றம், உள்நாட்டில் முடிவுகளை எடுப்பதில் தடுமாற்றம் என்று பட்டியலிட்டுள்ள அக்கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடியும் சரி, தலைவர் ராஜ்நாத் சிங்கும் சரி, "எங்களிடம் நிலையான ஆட்சியைக் கொடுங்கள். நாங்கள் சாதித்துக் காட்டுகிறோம். எங்களைப் பொறுத்த மட்டில் இந்தியா ஃபர்ஸ்ட்" என்பதுதான் இலக்கு" என்று கூறியிருக்கிறார்கள்.

மத்திய தர மக்களை குறி வைத்து அவர்களின் வருமான வரி செலுத்தும் விதத்தில் சில சலுகைகள் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தவிர, வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணத்தை மீட்பது, உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதில் அதிக முதலீடு செய்வது, வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு சிறப்பு வேலைவாய்ப்பு திட்டம், இயற்கை வளங்களை வெளிப்படையாக ஒதுக்கீடு செய்வதற்கு கொள்கை முடிவு, ஒவ்வொருவரும் நோயின்றி இருக்கும் உரிமை என்றெல்லாம் பல அறிவிப்புகளை மோடியும் வெளியிட்டுள்ளார். ராஜ்நாத் சிங்கும் பட்டியலிட்டுள்ளார். இவற்றின் அடிப்படையில் ""நல்ல நிர்வாகம், வளர்ச்சி, நிலைத்த தன்மை, பாதுகாப்பு" இந்த நான்கையும் மேம்படுத்துவோம் என்று "டெல்லி பிரகடனம்" செய்திருக்கிறது பா.ஜ.க.

ஆனால் இரு கட்சியனருமே இலங்கை விவகாரத்தில் "சர்ச்சைக்குரிய" கருத்து எதையும் சொல்லவில்லை. குறிப்பாக தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு கூட்டணி அமைவதே சிக்கல் என்ற நிலையில் அக்கட்சி இலங்கை தமிழர் பிரச்சினை பற்றியோ, தமிழக மீனவர்கள் பிரச்சினை பற்றியோ அதன் பிரகடனத்திலோ, அரசியல் தீர்மானங்களிலோ எந்த நிலைப்பாடும் எடுக்கவில்லை. ஆனால் பா.ஜ.க.விற்கு அப்படியில்லை. தமிழ்நாட்டில் வைகோ, விஜயகாந்த், டாக்டர் ராமதாஸ் ஆகியோருக்கு வலை வீசி காத்திருக்கிறது. இலங்கை தமிழர் விஷயத்திலும், மீனவர்கள் விஷயத்திலும் காங்கிரஸை விட பா.ஜ.க. வித்தியாசமான கட்சி என்று பிரச்சாரம் மேற்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக வைகோ இதை திரும்பத் திரும்ப சொல்லி வருகிறார். ஆனால் இப்போது வெளிவந்துள்ள பா.ஜ.க.வின் அரசியல் தீர்மானத்தில் இது பற்றி இலங்கை அரசின் மீது கண்டனம் எதையும் தெரிவிக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால் "இந்தியாவிற்கும், இலங்கைக்கும் நீண்ட கால நல்லுறவு இருந்தது. அது இந்த அரசால் இரு நாடுகளுக்கு இடையில் அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டது" என்று பா.ஜ.க.வின் தலைவர் ராஜ்நாத் சிங் தன் பேச்சிலேயே சுட்டிக்காட்டியுள்ளார். அதே போல் பா.ஜ.க.வின் தீர்மானத்தில், "இலங்கை படைகளால் தொந்திரவுகள் இருந்தால், தமிழக மீனவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்" என்று மட்டுமே கூறியிருக்கிறது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுகிறார்கள் போராட்டம் நடத்தும் பா.ஜ.க., தன்னுடைய அரசியல் தீர்மானத்திலேயே அது பற்றி கண்டனம் எதையும் தெரிவிக்கவில்லை. "ஏதேனும் தொந்திரவுகள் இருந்தால்" என்று கூறி, அந்த விவகாரத்தையே பிசுபிசுக்க வைத்துள்ளது.

இது மட்டுமல்ல. இலங்கை தமிழர பிரச்சினை பற்றி பேசும் போது அக்கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங், "இலங்கையில் உள்ள தமிழர்களின் நலனை காக்க ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் தூதரக முயற்சிகள் தோற்று விட்டன" என்று இந்திய அரசைச் சாடுவதோடு நிறுத்திக் கொண்டு விட்டது. ஆகவே இதுமாதிரி சூழ்நிலையில் வைகோ, ராமதாஸ், விஜயகாந்த் போன்றோர் இலங்கை தமிழர் பிரச்சினையில் பா.ஜ.க. வித்தியாசமான கட்சி என்று எதை வைத்து பிரச்சாரம் செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. அதே நேரத்தில் தமிழகத்தில் கூட்டணிக் கட்சிகள் வேண்டும் என்பதற்காக தங்கள் கட்சியின் வெளியுறவுக் கொள்கையில் "தியாகம்" செய்யத் தயாராக இல்லை என்பதையே பா.ஜ.க. தலைவர்களின் பேச்சும், அரசியல் தீர்மானங்களும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.


இந்திய பாராளுமன்றத் தேர்தல் இந்த முறை வித்தியாசமாக இருக்கிறது. காங்கிரஸின் மீது ஊழல் புகார்கள், மோசமான நிர்வாகம் போன்றவற்றை சுமத்தி அவர்களுக்கு விடை கொடுத்து விட பா.ஜ.க. முனைகிறது. அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட "பா.ஜ.க. மதவாத கட்சி" என்ற பழைய பிரச்சாரத்தையே மீண்டும் தூக்கிப் பிடிக்கிறது காங்கிரஸ் கட்சி. இக்கட்சியின்தலைவர்களான சோனியா காந்தியோ, ராகுல் காந்தியோ "ஆட்சியின் சாதனைகளை" முழு வீச்சில் கொண்டு போய்ச் சேர்த்து வாக்குக் கேட்க தயங்குவது போலவே தெரிகிறது. ஆனால் தங்களுடையை அடிப்படைக் கொள்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டிய நிலைமை பா.ஜ.க்.விற்கு ஐந்தாவது முறையாக நேர்ந்திருக்கிறது என்பது இந்தத் தேர்தலின் இன்னொரு தனிச்சிறப்பு.

நரேந்திரமோடிக்கு எதிராக ராகுல் பிரதமர் வேட்பாளர் என்றால் ஜெயிப்பது கடினம் என்பது காங்கிரஸ் கட்சிக்குப் புரிகிறது. அதே நேரத்தில் பிரதமர் மன்மோகன்சிங்கை முன்னிறுத்தியும் ஜெயிக்க முடியாது என்பதை உணருகிறது. அதனால்தானோ என்னவோ கடந்த பத்தாண்டு சாதனைகளைக் கூட முழு வேகத்தில் பிரச்சாரம் செய்யாமல் அமைதி காக்கிறது காங்கிரஸ் கட்சி. இருந்த கூட்டணிகளை விலக்கி வைத்த காங்கிரஸ் இப்போது "மதசார்பற்ற இந்தியா" என்ற நோக்கில் கூட்டணிக் கட்சிகளுக்கு வலை விரிக்கிறது. பா.ஜ.க.வோ கூட்டணி கிடைக்காததால் "வளர்ச்சித் திட்டங்கள். ஊழல் ஒழிப்பு" என்ற நோக்கில் கட்சிகளை திரட்ட நினைக்கிறது. இருவருக்கும் இந்திய வாக்காளர்கள் என்ன மாதிரி பதிலைச் சொல்லப் போகிறார்கள் என்பதுதான் வரும் நாட்களில் தேர்தல் பிரச்சாரக் களத்தின் முக்கிய அம்சங்களாகத் திகழப் போகின்றன!

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# XP பாவனையாளர்களுக்கு ஆறுதல் தரும் செய்தி




மைக்ரோசொப்ட் நிறுவனம் தான் அறிமுகப்படுத்திய விண்டோஸ்8, விண்டோஸ் 8.1 இயங்குதளங்களில் விற்பனையை அதிகரிக்கும் முயற்சியில் மும்முரமாக இறங்கியுள்ளது.

இதற்காக முன்னர் அறிமுகப்படுத்திய MicroSoft XP இயங்குதளத்திற்கான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்குவதை இந்த வருடம் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியுடன் நிறுத்தவுள்ளதாக அறிவித்திருந்தது.

எனினும் தற்போது இக்கால எல்லையை 2015 ஆம் ஆண்டு ஜீலை 14 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

இதேவேளை அடுத்த வருடம் விண்டோஸ் 9 இயங்குதளத்தினை அறிமுகம் செய்ய மைக்ரோசொப்ட் நிறுவனம் திட்டமிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# Yamaha அறிமுகப்படுத்தும் புதிய மோட்டார் வண்டி



மோட்டார் வண்டி உற்பத்தியில் கொடி கட்டிப் பறக்கும் நிறுவனங்களுள் ஒன்றான Yamaha ஆனது தற்போது மூன்று சில்லுகளை கொண்ட நவீன மோட்டார் வண்டி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

Yamaha Tricity எனும் பெயருடைய இந்த மோட்டார் வண்டியானது டோக்கியோவில் இடம்பெற்ற மோட்டார் வாகன கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

125CC உடையதும் 4 ஸ்ட்ரோக் என்ஜி னைக் கொண்டதுமான இந்த வண்டி அடுத்த வருடம் விற்பனைக்கு வரவுள்ளதுடன் இதன் பெறுமதியானது 4000 யூரோக்களாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நவீன தொழில்நுட்பத்துடன் கைபேசி ஸ்பீக்கர் அறிமுகம்




Favi நிறுவனமானது புளூடூத் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டதும் இலகுவாக எடுத்துச்செல்லக்கூடியதுமான ஸ்பீக்கர்களினை அறிமுகம் செய்துள்ளது. Boomerang, Boomerang Mini என்ற இரண்டு வகை பதிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளை, கறுப்பு, மஞ்சள் எனும் மூவகை நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ள Boomerang ஸ்பீக்கர் ஆனது 7.83 X 8.2 X 2 அங்குல அளவு கொண்டதாகவும், 6W சக்தியினை வெளிவிடக்கூடியதாகவும் இருக்கின்றது.

இதன் பெறுமதியானது 79.99 டொலர்களாகும்.

இதேவேளை Boomerang Mini 4w சக்தியினை வெளிவிடக்கூடியதாகவும், 5.91 X 6.12 1.49 அங்குல அளவுடையதாகவும் காணப்படும் அதேவேளை இதன் விலையானது 59.99 டொலர்களாக காணப்படுகின்றது.

# Intel நிறுவனம் அதிரடி




மைக்ரோ புரோசசர் சிப்ஸ் போன்றவற்றினை உருவாக்குவதில் பிரபல்யம் வாய்ந்த நிறுவனமான Intel தனது பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி அடுத்த வருடத்திற்குள் தமது பணியாளர்களின் எண்ணிக்கையை 5 ஆயிரத்து 380 இனால் குறைக்கவுள்ளது. தற்போது உலகெங்கிலும் சுமார் ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 600 பணியாளர்களைக் கொண்டுள்ள Intel நிறுவனம் 5 சத வீதமான பணியாளர்களையே குறைக்கவுள்ளது.

இது பற்றி கருத்து தெரிவித்த Intel நிறுவனத்தின் பேச்சாளர் Kraeuter "ஓய்வு பெறுபவர்கள், சுயமாக வேலையை விட்டு விலகுபவர்கள் உட்பட மேலும் சில பணியாளர்களையே நிறுத்தவுள்ளதாக" குறிப்பிட்டார்.

# கம்பியில்லா முறையில் மின் இணைப்பு

கம்பியில்லா முறையில் மின் சாதனங்களுக்கு மின் இணைப்பைப் பெறும் முறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.


செல்போன் உள்ளிட்ட மின் சாதனப் பொருட்களை வயர் இணைப்பு இல்லாமல் சார்ஜ் செய்து கொள்ளக்கூடிய முறையை அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த பல்கலைக்கழகத்தின் மின்னணு மற்றும் கணினி பொறியியல் துறை உதவி பேராசிரியர் யாரோஸ்லாவ் உர்ஸீமோவ் கூறுகையில்,

"மிகவும் நுண்ணிய மின் காந்த அலைகள் மூலம் மின்சாரத்தை கொண்டு செல்ல முடியும். இதன் மூலம் கம்பி இணைப்பு இல்லாமலேயே மின் சாதனப் பொருட்களுக்கு தேவையான மின்சாரத்தைப் பெற்று இயக்க முடியும்.

மின்காந்த அலைகளை பெற்று மின்சார்மாக மாற்றும் கருவியில் உள்ள கொயில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு ஏற்ப மின்சாரத்தை எடுத்துச் செல்லும் தூரத்தையும் அதிகரிக்க முடியும்.

செல்போன் போன்ற சிறிய மின் சாதனங்கள் மட்டுமின்றி, பெரிய அளவிலான மின் சாதனங்களுக்கும் இந்த தொழில்நுட்பத்தின் மூலம் மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம்" என்றார்.




# அசுர வளர்ச்சியில் Whats App




இன்றைய சூழலில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் தன் கட்டுக்குள் வைத்துள்ளது பேஸ்புக்.

ஆனால் தனிப்பட்ட முறையில் இருவர் இன்று மெசேஜ் செய்ய பயன்படுத்துவது வாட்ஸ் அப் (WhatsApp) தான், இன்று அதிகமான இளைஞர்களும் இதைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக டுவிட்டரை வீழ்த்தி படுவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

இன்று டுவிட்டர் அக்கவுண்ட் கூட இல்லாமல் பலரை நாம் பார்க்கலாம், ஆனால் வாட்ஸ் ஆப் இல்லாமல் நிச்சயம் ஸ்மார்ட் போன் பயன்படுத்துபவரை பார்க்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு பிரபல்யமடைந்துள்ளது.

விரைவில் இது பேஸ்புக்கை வீழ்த்தினாலும் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் படுகொலை குறித்த விசாரணையை நடத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை மீது இனப்படு கொலை விசாரணை நடத்த இந்தியா தீர்மானம் கொண்டு வர வேண்டும் என பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது.

இலங்கை போர் குறித்து ஜேர்மனியில் விசாரணை நடத்திய நிரந்தர மக்கள் தீர்ப் பாயம் நேற்றுமுன்தினம் அளித்த தீர்ப்பில், இலங்கையில் நடை பெற்றது திட்டமிட்ட இனப்படு கொலை என்று அறிவித்திருக் கிறது. இந்த இன அழிப்புக்கு அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் துணையாக இருந்ததாகவும் தீர்ப்பாயம் கூறியுள்ளது.

இதில் இந்தியாவிற்குள்ள பங்கு குறித்த ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகவும், அவற்றை ஆய்வு செய்து பின்னர் தீர்ப்பளிப பதாகவும் நிரந்தர மக்கள் தீர்ப் பாயம் தெரிவித்திருக்கிறது.

இலங்கைப் போரின் போது சராசரியாக தினமும் ஆயிரம் பேர் வீதம் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டிருக்கலாம் என்று தெரிவித் துள்ள தீர்ப்பாயம், இது திட்ட மிட்ட இனப்படுகொலை தான் என் றும், போருக்கு பிறகும் இலங் கையில் இனப்படுகொலை தொடர் வதாகவும் ஆதாரங்களுடன கூறியிருக்கிறது.

தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என ஐ.நா. விதிகளில் குறிப்பிடப்பட் டிருப்பதால், இந்த கருத்தின் அடிப்படையிலேயே இலங்கையில தமிழர்கள் வாழும் பகுதிகளைப பிரித்து தமிழீழம் அமைக்க முடியும். இதற்கான ஏற்பாடு களை ஐ.நா. மேற்கொள்ள வேண்டும் என்று நிரந்தர மக்கள் தீர்ப்பாயமும் அதன் பரிந்துரைகளில் தெரிவித்திருக் கிறது.

இலங்கை இனப்படுகொலை தொடர்பான சந்தேக நிழல் இந்தியா மீதும் படிந்துள்ள நிலையில், இனப் படுகொலை குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதன் மூலம் தான் தன் மீதான சந்தேக நிழலை மத்திய அரசு போக்க முடியும்.

எனவே, இனப்படுகொலைக்கு துணை போகவில்லை என்பதை நிரூபிக்கவும், ஈழத்தமிழர் நலனை பாதுகாக்கவும் கீழ்க் கண்ட நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையக கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக இனப்படுகொலை விசா ரணை நடத்துவதற்கான தீர் மானத்தை இந்தியா கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்.

தேசிய இனமாக அறிவிக்கப் பட்டுள்ள ஈழத் தமிழினம் தங்களுக்கென தமிழீழம் என்ற புதிய நாட்டை உருவாக்கு வதற்காக நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் மேற்கொள்ள வேண் டும்.


தீர்ப்பாயம் பரிந்துரைத்தி ருப்பதைப் போல ஈழத்தமிழர் கள் கொத்துக்கொத்தாக படு கொலை செய்யப்பட்ட மே 18 ஆம் திகதியை முள்ளிவாய்க் கால் நினைவு நாள், சர்வதேச இனப்படுகொலைக்கு எதிரான நாள் என்று ஐ.நா. மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் கூறப் பட்டுள்ளது. (2)



குஜராத் தலைநகர் காந்திநகரில் முதல்வர் நரேந்திர மோடியை, தென்னாபிரிக்க ஹை கமிஷனர் மொருல் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# சிரியாவின் உள்நாட்டு பிரச்சினைக்கு தீர்வாக இராணுவ நடவடிக்கை அமைய முடியாது

## வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவிப்பு



(மாண்ட்ரீயாக்ஸ்)

***சிரியாவில் நடைபெற்றுவரும் மிக மோசமான உள்நாட்டு போருக்கு தீர்வாக இராணுவ நடவடிக்கை இருக்கமுடியாது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரி வித்துள்ளார்.***

சிரியா பிரச்சினை குறித்த ஜெனீவா II அமைதிப்பேச்சு வார்த்தை சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள மாண்ட்ரீயாக்ஸ் எனுமிடத்தில் நேற்று முன் தினம் தொடங்கியது.

ஐ.நா. முயற்சியால் 40 நாடுகள் கலந்துகொள்ளும் இப்பேச்சுவார்த்தையில் சிரியா வின் ஜனாதிபதி சார்பிலும், போராளிகள் சார்பிலும் பிரதி நிதிகள் கலந்துகொண்டு ஆவேசமாக பேசினர்.


சிரியாவில் மூன்று வரு டங்களாக நடைபெற்றுவரும் உள்நாட்டு போரில் ஒரு இலட் சத்து 20 ஆயிரம் பேர் கொல் லப்பட்டும், ஒரு கோடி பேர் பட்டினியாகவும் வாழ்கின்றனர். இந்த பேச்சுவார்த்தையின் மூலம் சிரியாவின் கொடுமை களுக்கு முடிவு கட்ட எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கு அங்கு ஆட்சிமாற்றம் மட்டுமே தீர்வாகும் என்று பெரும் பான்மையான நாடுகள் கருது கின்றன.

இக்கூட்டத்தில் பங்கேற்ற வெளியுறவுத்துறை அமைச் சர் சல்மான் குர்ஷித் உரை யாற்றுகையில்,

சிரியாவில் நடைபெற்று வரும மிக மோசமான உள் நாட்டு சண்டைக்கு தீர்வாக இராணுவ நடவடிக்கை இருக்க முடியாது. சிரியா மக்களே தங்கள் விதியை, எதிகாலத்தை தீர்மானிக்க வேண்டும். இரா ணுவ நடவடிக்கைக்கு வெளி நாடுகள் ஏற்பாடு செய்யமுடி யாது.

சிரியாவில் நிலவும் சீர் குலைவை முடிவுக்கொண்டு வர தகுந்த நடவடிக்கை எடு க்க இப்பேச்சுவார்த்தை உதவ வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு சபை மற்றும் பொதுச்சபை யில் கொண்டுவரப்பட்ட பல் வேறு தீர்மானங்களுக்கு இந்தியா வன்முறையை முடி வுக்கு கொண்டுவரவேண் டும் என்றே நடுநிலையில் வாக்களித்து வந்துள்ளது என அவர் கூறினார் .(2)

# ஒபாமா - போப் பிரான்சிஸ் மார்ச் 27 இல் சந்திப்பு





(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா போப் பிரான் சிசை எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி வாடிகனில் சந்தித்து பேசவுள்ளார்.

இதன்போது உலகில் நில வும் ஏழ்மை மற்றும் ஏற்றத் தாழ்வுகளை சமாளிப்பது குறித்து அமெரிக்க ஜனா திபதி, போப் பிரான்சிசை சந்தித்து பேசவுள்ளார்.


எதிர்வரும் மார்ச் மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற் றுப்பயணம் மேற்கொள்ளும் ஒபாமா மார்ச் 27 ஆம் திகதி போப்பை சந்திக்கிறார் என்று அமெரிக்க ஜனாதிபதியின் செய்தித்தொடர்பாளர் கூறி யுள்ளார்.

இச் சந்திப்பில் உலகில் நிலவும் ஏழ்மைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், மக் களிடையே வளர்ந்துவரும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது குறித்தும் இருவரும் விவா திக்கின்றனர். அப்போது இத்தாலி ஜனாதிபதி மற்றும் பிரதமரை உரோமில் சந் திக்கவுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதியே ஐரோப்பா செல்லும் ஒபாமா, 24, 25 ஆம் திகதிகளில் நெதர்லா ந்தில் நடைபெறும் அணு சக்தி பாதுகாப்பு உச்சிமா நாட்டில் கலந்துகொள்கிறார். பின்னர் 26 ஆம் திகதி பெல்ஜியத்தில் நடைபெறும் ஐரோப்பா மற்றும் அமெரிக்க உச்சிமாநாட்டில் கலந்துகொள கிறார். அங்கு பெல்ஜியம் தலைவர்கள் மற்றும் நேட்டோ பொதுச் செயலாளரையும் சந்தித்து ஒபாமா பேச்சுவார் த்தை நடத்துவார். (2)

# ஆட்சி செய்ய முடியாவிடின்; பதவி விலகுங்கள்

## கெஜ்ரிவாலுக்கு சிதம்பரம் அறிவுரை



(டாவோஸ்)

உங்களால் ஆட்சிசெய்ய முடிவில்லையானால், பதவி விலகுங்கள்: கெஜ்ரிவாலுக்கு நிதியமைச்சர் ப. சிதம்பரம் அறிவுரை விடுத்துள்ளார்.

ஊழலுக்கு எதிரான பிர சாரத்தை மேற்கொண்டு மிகக்குறுகிய காலத்தில் டில்லி அரியணையில் அமர்ந்துள்ள கட்சிஆம்ஆத்மிகட்சி மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்கிற வேகத்தில் செயற்படும அக்கட்சியின் நடவடிக்கை கள் அராஜகமாக மாறியிரு க்கிறது என்று விமர்சன த்திற்கு ஆளாகியுள்ளன.


டில்லியில் சரியாக செயற் படாத பொலிஸ் அதிகாரி களை மாற்றவேண்டும்என்று மத்திய அரசு மற்றும் டில்லி பொலிஸாருக்கு எதிராக திட ரென 30 மணி நேர போரா ட்டத்தில் கெஜ்ரிவால் இறங் கினார்.

டில்லியின் மத்திய பகுதி யில் நடந்த இப்போராட்டத் தால் வாகனப்போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டது. மேலும் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டதால், பொது மக்களும் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், சுவிட் சர்லாந்தில் நடைபெறும் உலக பொருளாதார மன் றத்தில் கலந்துகொள்ள சென் றுள்ள நிதியமைச்சர் ப. சித ம்பரம் கெஜ்ரிவால் குறித்து கூறியதாவது.

டில்லி அரசில் இருக்கிற போது, நீங்கள் ஆட்சி செலு த்தவேண்டும். உங்களால் ஆட்சிசெலுத்தமுடியவில்லை என்றால், உடனே பதவியை விட்டு விலகுங்கள். தெருப் போராட்டத்தால் உங்களது ஆளும் திறமையின்மையை மறைக்க முடியாது. கடந்த சில நாட்களில் கெஜ்ரிவால் அராஜகத்தின் உச்சிக்கே சென்றுள்ளார் என அவர் கூறியுள்ளார். (2)

# சிவாஜி சிலையை அகற்ற சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



(சென்னை)

சென்னை மெரீனா கடற் கரையில் உள்ள சிவாஜி சிலையை அகற்ற சென்னை உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.


சென்னையை சேர்ந்த சீனிவாசன் என்பவர் தொட ர்ந்த வழக்கில் உயர்நீதி மன்றம் மேற்கண்ட உத் தரவை பிறப்பித்துள்ளது.

சென்னை மெரீனா கடற் கரை வீதியில் அமைந்துள்ள சிவாஜி சிலையால், அப் பகுதியில் வீதி விபத்துகள் நடப்பதாகவும், எனவே, அந்த இடத்தில் இருந்து சிலையை அகற்றிவேறு இடத்தில்வைக்க தமிழக அரசுக்கு உத்தர விடக் கூறி தியாகி சீனி வாசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், சிவாஜி சிலையை மெரீனா கடற்கரை வீதியில் இருந்து அக ற்றி வேறு இடத்துக்கு மாற்றம் செய்ய தமிழக அரசுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது. (2)

# குடியரசு தினவிழாவில் பங்கேற்குமாறு ஜப்பான் பிரதமருக்கு மன்மோகன் அழைப்பு

(டில்லி)



இந்திய குடியரசு தின விழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக் கிழமைகொண்டாடப்படவுளளது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தின ராக ஜப்பான்பிரதமர் ஷின்சோ அபே கலந்து கொள்கிறார்.

ஷின்ஷோ அபே இந்திய குடியரசு தினவிழாவில பெருமைப்படுத்தப்படும் முதல பிரதமராவார்.

இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் அழைப்பின் பேரில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நாளை முதல் 27 ஆம் திகதி வரையான 3 நாட்கள் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

இதன்போது இந்தியா- ஜப்பானுக்கு இடையேயான வருடாந்த மாநாட்டில் கல ந்து கொண்டு பிரதமர் மன் மோர்கன் சிங்கை சந்தித்து பேசுகிறார். இரு பிரதமர்களின் பேச்சில் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்தும், ஒப்பந்தங்கள் குறித்தும் பேசப்படுகிறது.

இதேவேளை நாளை மறு தினம் நடைபெறும் குடியரசு தின விழாவில் கலந்து கொள் ளும்படி ஜப்பான் பிரதமருக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி யும் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தனது மனைவி அகே அபேயுடன் இந்தியாவிற்கு வருகைதரவுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னார் மனிதபுதைகுழி குறித்து சர்வதேச விசாரணை வேண்டும்

## செல்வம் எம்.பி.வலியுறுத்து

மனித புதை குழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைபபின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

செம்மணி மனித புதை குழி யைப் போன்றே மற்றுமொரு மனித புதைகுழி மன்னாா திருக் கேதீஸ் வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மனித புதை குழி தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும்.வன்னி மாவட்ட டிப்போக்களில் காணப்படும் பேருந்துகள் மிகவும் பழையவை. வன்னி டிப்போவிற்கு புதிய பேருந்துகள் வழங்கப்பட வேண் டும்.

பழைய பேருந்துகளை போக்குவரத்துக்கு உகந்த வகையில் பழுது பார்த்து கொடுக்க வேண்டும் எனவும்அவர் கோரியுள்ளார். (அ-2)

# அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் மெகாவாசி-2 பரிசுச் சீட்டிழுப்பு முடிவுகள் வடமாகாணத்தில் 102 அதிர்ஷ்டசாலிகளுக்கு 14 இலட்சம் ரூபா பெறுமதியான பரிசுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிறீன் கிறாஸ் ஹோட்டல் மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### அரசலிங்கம் ஜெனிஸ்வரன்

கரும்புள்ளியான் பாண்டியங்குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட அரசலிங்கம் ஜெனிஸ்வரன் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று நடைபெற்றது.



### திருமதி. சரஸ்வதி சிதம்பரநாதன்

(தேர்தல் திணைக்களம் யாழ்ப்பாணம்) அல்லாரை வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி சிதம்பரநாதன் 22ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.



### முத்துசாமிக்குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்

கெருடாவில் தெற்கு தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத் துசாமிக்குருக்கள் பாலசுப்பிர மணியக்குருக்கள் 22 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று நடைபெற்றது.



### கண்ணப்பமூர்த்தி உமாகாந்தன்

பளை வண்ணாங்கேணியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணப்பமூர்த்தி உமாகாந்தன் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று நடைபெற்றது.

# இந்திய கடற்றொழிலாளர்கள் றோலர் மீன்பிடி முறையை நிறுத்துவதே நல்லது

## பேராசிரியர் மாட்டின் பார்பிக் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்திய கடல் தொழிலாளர்கள் பாக்கு நீரிணையில் கடல் தொழிலில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தினைக் காக்க வேண்டியவர்களாக இருக்கையில் இந்தியத் தரப்புக்கள், றோலர் மீன்பிடி முறையை குறைத்தல் அல்லது கைவிடுவது உகந்த முயற்சியாகும் என பேராசிரியர் மாட்டின் பார்பிக் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, யாழ்ப்பாணம், கடல் தொழில் சமுத்திரவியல் பல்கலைக் கழகம், ஙெதர்லாந்திலுள்ள அடெம்ஸடம் பல்கலைக்கழகம் போன்றன இணைந்து பாக்கு நீரிணையில் நிலவும் கடற்றொழில் முரண்பாடு பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு ஒன்றை கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கேட்போர் கூடத்தில் இரு நாட்கள் நடத்தின.

இம் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே நெதர்லாந்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மாட்டின் பார்பிக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

இந்தியா கட்டாயமாக றோலர்களின் எண்ணிக்கையினைக் குறைக்க வேண்டும். முழுமையாகக் கைவிட்டாலும் வரவேற்கத்தக்கது. இலங்கையில் ஐம்பதாயிரம் கடற்தொழிலாளர்களும் இந்தியாவில் இலட்சக்கணக்கான கடற்தொழிலாளர்களும் இக் கடல் பரப்பில் தொழிலில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தினைக் காக்க வேண்டியவர்களாகவுள்ள நிலையில் றோலர்களின் பாதிப்புக்களை உணர்ந்து அதன் எண்ணிக்கையினைக் குறைக்க அவர்கள் முன்வர வேண்டும்.

இதேவேளை கொழும்புப் பல்கலைக்கழக துணைவேந்தர் கருத்துரைக்கையில்,

பல்கலைக்கழக ஆராய்ச்சிகள் பக்கச் சார்பற்றதாக அமையும். இப் பிரச்சினை கடல்தொழிலாளர் சார்ந்த பிரச்சினையாகவுள்ளது. இந்நிலையில் பலரதும் ஒத்துழைப்புடனும் பங்களிப்புடனுமே தீர்வினை எட்ட முடியும்.

நாம் பல்கலைக்கழகங்கள் என்ற வகையில் இப்பிரச்சினைக்கான ஆராய்ச்சியை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம். எதிர் காலத்தில் தென்னிந்திய ஆராய்ச் சியாளர்களுடன் இணைந்தும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இருக்கின்றோம். இப் பிரச்சினை எமது மக்களுடைய வாழ்வாதாரம் மற்றும் சூழலியல் சார்ந்த பிரச்சினையாகவுள்ள நிலையில் நாம் சகல வழிகளிலும் தீர்விற்காக உழைக்க முன்வருகின்றோம்.

வடமாகாண கடல்தொழிலாளர் இணையத்தின் முன்னாள் தலைவர் என். சுப்பிரமணியம் கருத்துரைக்கையில்,

எமது வடக்கு மாகாண கடல் தொழிலாளர்கள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பு, உயர்பாதுகாப்பு வலயங்கள் என தொழில் உரிமை பாதிப்புக்களை எதிர் கொண்டு யாரிடம் முறையிடுவது எங்கே தீர்வைப் பெறுவது என்பது தெரியாதவர்களாகவுள்ளனர்.

இந்திய இழுவைப்படகுகளால் வருடாந்தம் பல மில்லியன் ரூபாய்களை நாம் இழக்கின்றோம். கற்பிட்டி முதல் திருகோணமலை வரையான கடல் வளங்கள் றோலர் முறை மீன்பிடியினால் காவுகொள்ளப்படுகின்றது. இது எமது எதிர்கால தொழில் முயற்சியினையும் கேள்விக்குள்ளாக்குகின்றது.

போரினால் தொடர்ச்சியாகப் பாதிப்புக்களை எதிர்கொண்டு மீள முடியாது தவிக்கும் எம்மீது இவ்வாறான ஓர் அநியாயம் கட்டவிழ்த்து விடப்படுகின்றமை கவலையளிக்கின்றது.

யுத்தத்தில் சகலதையும் இழந்த எமக்கென. அரசாங்க உதவிகள், இழப்பீடுகள் எதுவும் தரவில்லை. எனினும் தொழிலில் ஈடுபட்டு ஏதோவொரு வகையில் மீள்வோம் என்ற நம்பிக்கையுடன் தான் நாம் இருந்தோம். வங்கிக் கடன்களைப் பெற்று கடல் தொழில் உபகரணங்களை கொள்வ னவு செய்து தொழிலில் ஈடுபட முயற்சித்தோம்.

இவ்வாறான நிலையில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களால் நாம் தொழிலை இடையில் கைவிட்டு ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வங்கியில் பெற்ற கடனை மீளச் செலுத்தும் அளவுக்குக் கூட வசதியற்றவர்களாக தலைமறைவு வாழ்க்கைக்குச் செல்லும் நிலையிலேயே எமது தொழிலாளர்கள் உள்ளனர்.

எனவே எமது மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு உடனடியாக 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தக் கோருகின்றோம.

மேலும் சில காலம் எமது தொழிலாளர்களின் பிரச்சினையில் கரிசனையற்று உரியவர்கள் இருப்பார்கள் ஆயின் நாம் ஒரு நேர சோற்றுக்குக் கூட கையேந்த வேண்டிய அவல நிலையே ஏற்படும் என்றார். (அ-2)

# ஐ.தே.க.வின் சட்டமூலம் சபையால் நிராகரிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவிருந்தசட்டமூலயோசனை ஒன்று 38 மேலதிக வாக்குகளினால் நிராகரிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் தனது சட்டமூல யோசனையை தாக்கல் செய்ய விஜேதாச ராஜபக்ஷ இன்று சபை யில் அனுமதி கோரினால். இதன் போது அவரது சட்டமூல யோசனை நிராகரிக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களை பதவியில் இருந்து நீக்கும் போது நியாயமான , சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தும்நடைமுறைகளை கொண்டு சட்டமூல யோசனை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ராஜபக்ஷ தீர்மானித்திருந்தார்.

இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமா இல்லையா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என ஆளும் கட்சியினர் யோசனை முன்வைத்தனர். இதனையடுத்து பிரதி சபாநாயகர் வாக்கெடுப்பை நடத்த தீர்மானித்தார்.

இதன்படி நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என 38 வாக்குகளும் அதற்கு எதிராக 72 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (அ-2)

# சிறுவர் உரிமை பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு


(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் சிறுவர் உரிமை பாதுகாப்பு குழுக்கள் எனும் த்லைப்பிலான செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 6 இற்கு மேற்பட்ட மாணவர் தலைவர்களை உள்ளடக்கிய 10 மாணவர்களையும் சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு குழுவிற்கு பொறுப்பான ஆசி ரியர்களின் விபரங்களையும் இவ்வாண்டிற்கான செயற்றிட்டம் என்பவற்றுடன் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இவர்களிற்கான செயலமர்வு அடுத்த மாதம் இடம் பெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒட்டுசுட்டான் கோட்டத்திற்குட்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு மு/ ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் துணுக்காய் கோட்டத்திற்குட்பட்டவர்களுக்கு மார்ச் 8 ஆம் திகதி மு/யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் மாந்தை கிழக்கு கோட்டத்திற்குட்பட்டவர்களுக்குமார்ச்15 ஆம்திகதி மு/பாலிநகர் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது [illegible]



புற்றுநோய் உபகரணங்களை எவ்வாறு பாவித்தல் புற்று நோயினை எவ்வாறு கட்டுப்படுத்தல் தொடர்பான தாதியர்களிற்கான கருத்தரங்கொன்று யாழ். தாதியர் பயிற்சிக்கல்லூரியில் 5 நாட்களாக சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட 306 யீ1 இனால் நடத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நாளும் தலா 60 தாதியர்கள் இதில் கலந்து கொண்டதோடு மொத்தம் 300 தாதியர்கள் கலந்து கொண்டனர். சர்வதேச [illegible] இப்பயிற்சி வழங்கப்படுகின்றது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (படம்: உ..சாளின்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யுத்த இழப்பீடு குறித்த அறிக்கை நான்கு வாரங்களில் வெளியாகும்

## புள்ளிவிபர திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

**உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெற்ற உயிரிழப்புக்கள், காணா மல் போதல்கள் மற்றும் சொத்து இழப்புக்கள் தொடர்பாக நாடு தழு வடிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கணக்கெடுப்பின் முழு மையான முதலாவது அறிக்கையை இன்னும் நான்கு வாரங்க ளில் வெளியிடுவோம் என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபர வியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சி. குண வர்த்தன தெரிவித்துள்ளார்.**

கடந்தகால யுத்த நிலைமைக ளால் இடம்பெற்ற உயிரிழப்புக்கள், காணாமற் போதல்கள், காயம டைதல்கள் மற்றும் சொத்து இழப் புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட கணக்கெடுப்பு தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்க ண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கணக்கெடுப்புக்கான தகவல் சேகரிக்கும் பணிகள் யாவும் நிறை வடைந்த நிலையில் கணக்கெடுப் பில் பெறப்பட்ட தகவல்கள் யாவும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தலைமையகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

1982 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெற்ற உயிரிழப் புக்கள், காணாமற் போதல்கள், காயமடைதல்கள் மற்றும் சொத்து இழப்புக்கள் தொடர்பில் கணக் கெடுப்பை-மேற்கொள்வதே எமது நோக்கமாகும்.

16 ஆயிரம் கணக்கெடுப்பு அதிகாரிகளைக்கொண்டு நாடு முழுவதும் இந்த கணக்கெடுப்பை மேற்கொண்டிருந்தோம். மேலும் 400 கண்காணிப்பு உத்தியோகத் தர்களையும் ஈடுபடுத்தியிருந்தோம்.

இதன்போது உள்நாட்டு யுத்தம் காரணமாக நாட்டில் 1982 ஆம் ஆண்டு முதல் எவ்வளவு உயிரி ழப்புக்கள், காயமடைதல்கள், காணா மற் போதல்கள் மற்றும் சொத்து இழப்புக்கள் இடம்பெற்றுள்ளன என்ற விடயங்களை வெளியிடுவோம்.

அதன் பின்னர் சிறிது காலத் தில் முழுமையான அறிக்கையை வெளியிடுவோம். அதாவது உயிரி ழப்புககள், காயமடைதல்கள், காணா மற் போதல்கள் மற்றும் சொத்து இழப்புக்கள் போன்றவை தொடர் பான முழுமையான விபரங்கள் இரண்டாவது அறிக்கையில் முழு மையாக இருக்கும்.

**கேள்வி:** கணக்கெடுப்பு முடிந்து விட்டது. எத்தனை குடும்பங்களி டம் தகவல்கள் பெறப்பட்டது?

**பதில்:** அந்த தகவல்கள் தற்போது என்னிடம் இல்லை. எவ்வாறெனினும் முழுமையான தகவல்களும் திணைக்களத்தில் உள்ளன. இடைக்கால அறிக் கையை நான்கு வாரங்களில் வெளியிடுவோம்.

**கேள்வி :** சில அரசியல் கட்சி கள் உங்கள் கணக்கெடுப்பு நடவ டிக்கைகளை விமர்சித்துள்ள னவே?

**பதில்:** ஆம். அவ்வாறு சில விமர்சனங்களை நானும் பத்திரி கைகளில் பார்த்தேன். யுத்தம் ஒன்று நடைபெற்ற நாட்டில் இவ் வாறு கணக்கெடுப்புக்களை மேற் கொள்வதற்கென ஒரு முறைமை காணப்படுகின்றது. சர்வதேச நாடுகளிலும்இந்தமுறைமை பேணப் படுகின்றது. அதன்படியே கணக் கெடுப்புக்களை முன்னெடுக்க முடியும். அதனையே நாங்களும் மேற்கொண்டு வருகின்றோம்.

அந்தவகையில் இவ்வாறான கணக்கெடுப்புக்களை மேற்கொள் ளும் பல்வேறு வகையான வரைய றைகள் உள்ளன. அதாவது கணக் கெடுப்பை மேற்கொள்ளும்போது ஒரு குடும்பம் முழுமையாக நாட்டை விட்டு வெளியேறியிருந்தால் அவர் கள் கணக்கெடுப்புக்குள் இடம்பெற மாட்டார்கள். அதேபோன்று ஒரு குடு ம்பத்தின் அனைத்து உறுப்பினர்க ளும் யுத்தத்தின்போது உயிரிருந்திரு ந்தால் அவர்களும் கணக்கெடுப் புக்கு உள்வாங்கப்படமாட்டார்கள். இதுதான் கணக்கெடுப்பின் இயல் பாகவுள்ளது. எனவே அவ்வாறான தகவல்களை தவிர்த்து ஏனைய தகவல்கள் அனைத்தும் கணக் கெடுப்புக்கு உள்வாங்கப்படும். தற் போது தவறவிடப்படுகின்ற தகவல் களையும் எதிர்காலத்தில் அறிக்கை க்கு உள்ளடக்குவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி:** இந்த விடயத்தில் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நம்பகத்தன்மை குறித்து விமர்சி க்கப்படுகின்றதா?

**பதில்:** புள்ளிவிபரத் திணைக் களத்தின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்ப முடியாது. நாங்கள் பல வருடங்களாக இவ்வாறான கணக்கெடுப்புக்களை முன்னெ டுத்து வருகின்றோம். உரிய முறை மைகளை கடைப்பிடித்தே இவற்றை செய்து வருகின்றோம். ஆனால், இதனைவிட சிறந்த கணக்கெடுப்பு முறை ஒன்று இருப்பின் அது குறி த்து அறிந்துகொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

**கேள்வி:** வீடுகளுக்கு சென்று கணக்கெடுப்பை மேற்கொள்ளும் போது அல்லது ஆவணங்களை கோரும்போது சிக்கல்கள் ஏற்பட்ட னவா? வெள்ளவத்தையில் மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

**பதில்:** அவ்வாறு பாரிய பிரச்சினை கள ஏற்படவில்லை. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எவ்வா றான சிக்கலும்கணக்கெடுப்பின்போது ஏற்பட்டிருக்கவில்லை. சில இடங்க ளில் சிக்கல்கள் வந்திருக்கலாம். ஆனால், கணக்கெடுப்புக்கள் வெற்றி கரமாக இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, இது தேசப்பற றுள்ள கணக்கெடுப்பு என்று சிலர் விமர்சித்திருந்தனர். நாங்கள் மிக வும் சிறந்த முறையில் உரிய விட யங்களை பின்பற்றி இந்த கணக் கெடுப்பை மேற்கொண்டு வருகின் றோம் என்றார். (அ-2)





வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பிரதேச மீனவர்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் 40 மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களை அமெரிக்க தூதுவர் மிச்சேல் சிசன் நேற்று வழங்கி வைத்தார். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

# மக்கள் ஆதரவை பெறுவதற்கு நடிகைகள் களமிறக்கம்?

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் மக்கள் ஆதரவை வெல்ல முடி யாது என்பதை உணர்ந்த அரசா ங்கம், நடிகைகளை தேர்தலில் போட்டியிடச் செய்யத் திட்டமிட்டு ள்ளது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரி வித்துள்ளார்.

திறமையான மக்களுக்கு தொண்டாற்றக் கூடியவர்களை அரசாங்கம் தேர்தலில் போட்டியிடச் செய்யவில்லை.

மாறாக, கடத்தல்காரர்கள், அரசியல்வாதிகளின் வாரிசுகள், உறவினர்கள், நடிகைகள், பாடகி களை அரசாங்கம் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கவுள்ளது.

நடிக, நடிகையருக்கு அரசியலில் ஈடுபட முடியாது என்பது எமது கட்சியின் நிலைப்பாடல்ல. எனி னும், எதேனும் ஓர் காரியத்தில் இறங்கும் போது அது பற்றிய அடிப் படை அறிவேனும் இருக்க வேண் டியது அவசியமானது.

இதற்கு முன்னரும் தென் மாகா ணத்தில் நடிகைகள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ள னர். எனினும், இவர்கள் ஒருநா ளும் மக்களுக்காக குரல் கொடுத்த தில்லை.

தற்போதைய அரசியல் கலாசார த்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

உடல் அழகு மட்டுமுடைய நடிகைகளை விடவும் அரசியல் தெளிவுடைய புத்திஜீவிகளை அரசி யலில் ஈடுபடுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## தமிழக மீனவர்களின் படகுகள் விடுவிப்பு

இலங்கை - இந்திய இரு தரப்பு புரிந்துணர்வு இணக்கப்படி தமிழகத்தின் 30 மீனவ மோட்டார் படகுகளை இலங்கை விடுவித்துள்ளதாக தமிழக அரசாங் கம் அறிவித்துள்ளது. இதனை அடுத்து மாற்று அறிவிப்பாக தமிழக அரசாங்க மும் இலங்கை மீனவர்களின் 11 படகுகளை விடுவிக்க உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள இரண்டு தரப்பு மீனவர்களின் சந்திப்புக்கு வழிவகுக்கும் வகையிலேயே இந் நடவடிக்கைகள் இரண்டு அரசாங்கங்களினால் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக இதுவரை 233 இந்திய மீனவர்களும் 130 இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

## பகல் நேரத்திலும் ஹெட்லைட் போட வேண்டும்

பகல் நேரத்திலும் மோட்டார் சைக்கிள் களில் ஹெட்லைட் போட வேண்டுமென பொலிஸார் உத்தர விட்டுள்ளனர்.

இன்று முதல் இந்தப் புதிய நியதி அமுலு க்கு வருகின்றது. இவ்வாறு பகல் நேரத்தில் ஹெட் லைட போட்டுக் கொண்டு மோட் டார் சைக்கிளைச் செலுத்துவதன் மூலம் விபத்து க்களை தவிர்க்க முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார். இந்த முறைமை வெற்றியளித்தால் எதிர்காலத்தில் ஹெட் லைட போடு வதை சட்ட ரீதியா க்க நடவடிக்கை எடுக்க ப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனை உருவாக்குபவை மருந்தோ, உணவோ அல்ல, இலக்கியங்கள்தாம்.

~ ஜெயகாந்தன்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## செத்தார் எலும்பும் எழப் பணிப்பான் திருக்கேதீச்சரத்தானே

தமிழுக்குப் பொருள் கூற முனைவது மிகவும் கடினமான விடயம். பலபொருள் தரக் கூடிய தமிழின் சுவையை நுகர்ந்து அனுபவிப்பதே பேரானந்தம்.

தமிழ் பல பொருள் தரக் கூடியது என்பதற்கு ஒரு சிறு உதாரணம் இது.

சீறாப் புராணத்தைத் தந்த உமருப் புலவரைச் சந்தித்த ஒருவர் ஐயன்மின்! நீங்கள் யாரை வழிபடுவீர்கள் என்று கேள்வி எழுப்புகிறார். அதற்கு உமருப் புலவர், **சிரமாறுடையானை** வழிபடுகின்றேன் என்று பதிலளித்தார்.

இப்போது கேள்வி கேட்டவருக்கு தலை சுற்றுகின்றது. சிரமாறுடையான் என்பது யாரைக் குறிக்கின்றது என்பதே தலைச்சுற்றுக்குக் காரணம்.

சிவன் தன் தலையில் கங்கையாற்றை வைத்திருப்பதால் அவன் சிரமாறு (சிரம்+ ஆறு) உடையான். விநாயகன் ஆனைமுகம் உடைய மாறுசிரம் கொண்டவன். பிரம்மனும் மாறு சிரத்தோன். முருகன் ஆறுமுகங்களை உடையவன் எனவே அவனும் சிரமாறுடையவன்.

திருமாலோ திருப்பாற்கடலில் தன்சிரத்தை கரத்தில் சாய்த்து பள்ளி கொண்டு ஆறுதல் கொள்கிறான். ஆக திருமாலும் சிரமாறு கொண்டவர். எனவே உமருப் புலவர் கூறிய சிரமாறு என்பது ஒரு பொருளை அல்லது ஒருவரைக் குறிப்பது அல்ல.

இதுபோன்று திருமுறைகளும் பாடிவர் காட்டும் பொருளும் அதனைப் பாடுவார் சுட்டும் பொருளும் 'வேறுபட்டவையாக இருக்கலாம்.

அவ் வகையில் மன்னாரில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் இருக்கக் கூடிய கேதீச்சர நாதனின் சிறப்பு திருஞானசம்பந்தராலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடிப் பணியப் பெற்றது.

பாடல் பெற்ற தலமாக விளங்கும் திருக்கேதீச்சரத்தில் இப்போது புதைகுழிகளில் இருந்து மனித எலும்புக் கூடுகளைத் தோண்டி எடுக்கின்றார்கள்.

மஞ்ஞைகள் (மயில்கள்) நடனமாடுகின்ற மாதோட்ட நன்னகரில் இப்படி ஒரு கொடுஞ் செயல் நடந்திருப்பது வேதனையிலும் வேதனை.

"...செத்தார் எலும்பு அணிவான் திருக் கேதீச்சரத்தானே" என்ற சுந்தரரின் கேதீச்சரத் தேவாரப் பதிகம் தரும் பொருள் என்ன? என்று ஆராய வேண்டியது இங்கு அவசியமாகின்றது.

அவ்வாறான ஒரு ஆராய்வில், **செத்தார் எலும்பும் எழப் பணிப்பான் திருக்கேதீச்சரத் தானே!** எனச் சுந்தரர் பாடினாரோ! என்று பொருள் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை.

எதுவாயினும் திருக்கேதீச்சரத்தானுடன் தொடர்புபடுத்தி "...செத்தார் எலும்பு" பற்றி சுந்தரர் பாடி இருப்பதால் அதற்குள் பலமான உண்மைகள் இருக்கவே செய்யும்.

ஏனெனில் என்பு மச்சையில் இருந்து பூம்பாவையை மீள உயிர்ப்பித்து குளோனிங் முறையை இந்த உலகில் முதல் முதல் அறிமுகப் படுத்தியவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

எனவே அவர் பாடிய தலத்தை, சுந்தரரும் பாடியதால் சுந்தரரின் நத்தார் படை ஞானன் பசு என்ற திருக்கேதீச்சரத் திருமுறை சுட்டி நிற்கும் **செத்தார் எலும்பு அணிவான் திருக்கேதீச் சரத்தானே!** என்ற பாடலுக்கு மனிதப் புதை குழியில் புதையுண்ட எலும்புகள் எழுந்து (எடுக்கப்பட்டு) உரைக்கப் போகும் பொருள் என்ன? என்பதை அந்தரப்படாமல் பொறுத்திருந்து பார்ப்பதே சாலச் சிறந்தது.

# மனித புதைகுழி விவகாரம் சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு?

(கொழும்பு)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைகளை இலங்கையின் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கையாளவுள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்காக கொழும்பிலிருந்த விசேட குழு ஒன்று மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப் படுகின்றது.

இந்தப் புதைகுழி மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் 11 ஆவது தடவையாக தோண்டப்பட்டது. நேற்று முன்தினம் மூன்று எலும்பக்கூடுகள் மீட்கப்பட்டன.

இந்த மனித புதைகுழியிலிருந்து இதுவரையிலும் 43 எலும்புக்கூடுகளும் எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று மீட்பு குழுவில் அங்கம் வகிக்கும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதற்கு அப்பால் சிறுவர்களின் பற்கள், பெண்கள் அணியும் முத்து மாலைகளின் முத்துக்கள், உடைந்த வளையல்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார், திருக் கேதீஸ்வரம் மனித புதைகுழியின் எல்லை எதுவரை உள்ளது என்பதை கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளோம் என்று மேற்படி புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவில் அங்கம் வகிக்கும் அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரத்ன அண்மையில் தெரிவித்தார்.

அத்துடன், இந்த மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டு வரும் மனித எலும்புக்கூடுகளுக்குரியவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பது தொடர்பில் கண்டறிவதற்கு நீண்ட நாட்கள் தேவைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## குழந்தை இயேசு ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அமைந்துள்ள குழந்தை இயேசு சிற்றாலய வருடாந்த திருவிழா நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜோண் மவுலிஸ் தலைமையில் நடைபெறும். (அ-2)

## ஜெகோவாவின் சாட்சிகள் மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஜெகோவாவின் சாட்சிகளின் ஒரு நாள் விசேட மாநாடு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 மணிக்கு "கடவுளுடைய வார்த்தை வல்லமையுள்ளது" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 11.35 மணிக்கு முழுக்காட்டுதல் இடம்பெறும். பிற்பகல் நிகழ்வாக "கடவுளுடைய வார்த்தையின் வல்லமை தொடர்ந்து மாற்றம் செய்ய உங்களுக்கு உதவட்டும்" எனும் பொருளில் பொதுப்பேச்சு நடைபெறும். (அ-2)

## உள்ளூராட்சி வார நிகழ்வும் பரிசளிப்பும்

(மானிப்பாய்)

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் உள்ளூராட்சி வார நிறைவு நாள் விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் செ.முரளிதரன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன் ரைன் ஜக்சீல், கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை அதிபர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மானிப்பாய் பட்டின வாசகர் வட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் சிவராஜா தலைமையில் "தமிழர்கள் இன்று தங்கள் பண்பாட்டை தக்கவைத்திருக்கின்றனர் -தவறவிட்டுள்ளனர்" என்னும் தலைப்பிலான சிறப்பு பட்டிமன்றமும் இடம் பெறவுள்ளது. (அ-9-23)

# புலம்பெயர் அமைப்புக்களுடன் பேச இலங்கை எம்.பிக்கள் குழு பயணம்

(கொழும்பு)

பிரிட்டனிலுள்ள புலம்பெயர் இலங்கையர்களையும், அந்நாட்டின் அரசியல் பிரமுகர்களையும் சந்தித்து தற்போதைய இலங்கையின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் தொடர்பில் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் பிரிட்டன் பயணமாகியுள்ளனர்.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாருக்கும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளார்.

தமது பயணத்திற்கு முன்னர் விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

இலங்கை நிலைவரம் தொடர்பில் புலம்பெயர் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை தெளிவுபடுத்தும் வகையில் தாங்கள் பிரித்தானியாவுக்கு சென்று 10 தினங்கள் அங்கு தங்கியிருந்து அமைப்புக்கள், துறைசார்ந்தவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை சந்தித்து பல்வேறு பட்ட விளக்கங்களை வழங்கவுள்ளோம்.

இதன் மூலம் அங்கிருக்கின்ற புலம்பெயர் மக்கள் தெளிவினை பெறுவர். அவர்கள் தொடர்பில் தெரிவிக்கப்படும் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு பதிலையும் நாங்கள் கூறுவோம்.

இலங்கையில் நீண்ட ஒரு அழிவின் பின்னர் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழல், அதன் பின்னரான நிலைவரங்கள் தொடர்பில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள், ஊடகச் செய்திகளின் தன்மை என்பன பற்றியும் நாம் இந்த பயணத்தின் போது விளக்கமளிக்கவுள்ளோம்.

குறிப்பாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கும் சென்று அங்கிருக்கின்ற முக்கிய மக்கள் பிரதிநிதிகளுடன் கருத்தாடல்களை செய்யவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக் தெரிவித்தார். (அ-2)

## தொலைபேசி ஒலித்ததால்; வைத்திருந்தவர் தடுத்து வைப்பு

(கிளிநொச்சி)

வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கையடக்கத் தொலைபேசியினை ஒலிக்கவிட்டவரை நீதிமன்ற நடவடிக்கைகள் முடியும் வரையிலும் தடுத்து வைத்திருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஜவாப்தீன் பொலிஸாருக்கு உத்தரவிட்ட சம்பவமொன்று நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வழக்கினை பார்வையிட்டுக் கொண்டிருந்த மேற்படி நபரின் கையடக்கத் தொலைபேசி திடீரென ஒலித்தமையினால் நீதிமன்றத்தின் அமைதி பாதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த நபரை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்ப்படுத்திய போது நேற்று பிற்பகல் 3 மணி வரை அவரைத் தடுத்து வைக்கும்படி பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (எ-1)

## கட்டுரை சமர்ப்பித்தல் பிற்போடப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகமும் பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தலின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவிருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுகள் இடம்பெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-254)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் எம்.மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் திறன் அபிவிருத்தி அமைச்சர் ரி.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்.தயாளன் கலந்து கொள்ளவுள்ளார்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களினை திருமதி சித்திரா குருகுலராஜா வழங்கி வைப்பார். (அ-2)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### அறியாமையை விரட்டும் கல்வி

நபிகள்நாயகம்(ஸல்)நவின்றார்கள்: கல்வி கற்பவர்கள் நிச்சயமாக அறியாமையை விரட்டுகிறார்கள். நான் ஆசிரியராக அனுப்பப்பட்டுள்ளேன்.

(நூல்:மிஷ்காத்)

ஒருவன் இரவில் ஒரு மணிநேரம் கல்வியில் ஈடுபடுவது அந்த இரவு முழுவதும் இறைவனை வணங்குவதை விட மிகச்சிறந்ததாகும்.

(நூல்:திர்மிதி)

நான் ஞானத்தை போதிக்கவே அனுப்பப்பட்டுள்ளேன்.

(நூல்:திர்மிதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாரகசீலன் சாதனை

# தெல்லிப்பழை யூனியனை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் அபார வெற்றி





யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் துடுப்பாட்டப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரன் பரமானந்தன் துவாரகசீலன் 200 ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்தார்.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் துவாரகசீலன் ஆட்டமிழக்காமல் 202 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

யாழ்.மாவட்டத் துடுபபாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் போட்டிகளில் நிகழ்த்தப்படும் சாதனைகள் பதிவிடப் படுவதில்லை.

இருந்தும், சென். ஜோன்ஸ கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பதிவுகளின் அடிப்படையில் இந்த ஓட்ட எண்ணிக்கை சாதனையாகக் காணப்படுகின்றது. இதற்கு முன்னர் 1966 ஆம் ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரன் கனகையா சூரிஸ் குமார்ஸ் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எதிராக மட்டுப்படுத்தப்படாத பந்துபரிமாற்றங்கள் கொண்ட போட்டியில் பெற்றுக்கொண்ட 181 ஓட்டங்களே அதிகூடிய ஓட்டங்களாக இதுவரையும் காணப்பட்டது.

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயது, பிரிவு-3 அணிகளுக்கிடையில் மட்டுப் படுத்தப்படாத பந்துபரிமாற்றங்கள் கொண்ட இரண்டு நாட்கள் துடுப்பாட்டப் போட்டிகள் (2014) தற்போது நடைபெற்று வருகின்றன.


இதன்போட்டியொன்று கடந்த செவ்வாய்க்கிழமை முதல் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி தனது முதல் இனிங்ஸில் 52 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பரமானந்தன் துவாரகசீலனின் 188 பந்துகளில் பெற்றுக்கொண்ட 202 (26 நான்கு, 2 ஆறு) ஓட்டங்களின் உதவியுடன் 9 இலக்குகளை இழந்து 482 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டத்தினை இடை நிறுத்திக்கொண்டது. மேலும் துடுப்பாட்டத்தில் அ.கானாமிர்தன் 105 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.


430 ஓட்டங்கள் பின்னிலையில் பதிலுக்குத் தமது இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி, 37.2 பந்துபரிமாற்றங்களில் 61 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. இதன் மூலம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 369 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக ஆர்.லோகதீஸ்வரன் இரண்டு இனிங்ஸிலும் 10 இலக்குகளைக் கைப்பற்றினார். (முதல் இனிங்ஸ் 4 (7), இரண்டாவது இனிங்ஸ் 6 (24). (க)









வடமாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ண சதுரங்கப் போட்டி நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரியில் ஆரம்பமானது. இதில் ஆளுநர் மாணவன் ஒருவருடன் சதுரங்கம் விளையாடுவதனையும், மாணவர்கள் சதுரங்கம் விளையாடுவதனையும், போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# வடமாகாண மாணவர்கள் சதுரங்கத்தில் சிறந்து செயற்படுகின்றார்கள்–சந்திரசிறி

கடந்த காலத்தில் சதுரங்க விளையாட்டில் எமது வடமாகாண மாணவர்கள் சிறந்த செயற்பாட்டை மேற்கொண்டிருந்தார்கள்.

அவர்களது ஊக்கத்தைப் பார்க்கும் போது இம்மாணவர்கள் எதிர்காலத்தில் மிகப்பிரபல்யம் வாய்ந்த விளையாட்டு வீரர்களாக உருவாகக்கூடிய நிறைய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான சதுரங்கப்போட்டி ஆரம்ப வைபவ நிகழ்வு நேற்று முன தினம் புதன்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

இவ்வருடம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இச் சதுரங்கப் போட்டிக்கு ஐந்து மாவட்டங்களில் இருந்தும் பங்குபற்றியுள்ளனர்.

ஆய்வொன்றின் அடிப்படையில் சதுரங்க விளையாட்டு ஆசிரியர், மாணவர்கள் மத்தியில் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தற்போதைய தகவலின்படி இவ் விளையாட்டில் ரஷ்ய நாடு முதலாவது இடத்தையும் இந்தியா இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

புத்திக்கூர்மையுடைய சமூகத்தை உருவாக்கக்கூடிய மூளை வளர்ச்சியை அதிகரிக்கவும் சதுரங்கப் போட்டி மாணவர்களுக்கு உதவுகின்றது.

சதுரங்க விளையாட்டின் அடிப்படைய விடயங்களை அறிந்து கொள்வது சுலபமானது.

இவ்விளையாட்டுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் அலுவலகம் என்றும் தயாராகவுள்ளது என ஆளுநர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜா, சதுரங்க விளையாட்டு நிபுணர் வித்தியாதரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (க)



திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு வீதியோட்ட நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இவ்வீதியோட்ட நிகழ்வை யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் சன்.தயாளன் ஆரம்பித்து வைத்தார். வீதியோட்ட நிகழ்வு இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இந்திய அணிக்காக மீண்டும் களமிறங்குவேன்




மோசமான பார்ம் காரணமாக இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் தொடர்ந்து ஓரங்கட்டப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் தனியார் ஊடகமொன்றுக்கு ஷேவாக் பேட்டி அளிக்கையில்,

ஏழாவது ஐ.பி.எல். போட்டி ஏலத்தில் காலிஸ், யுவராஜ்சிங் போன்ற சிறந்த வீரர்களை வாங்க அணிகளுக்கு வாய்ப்பு இருக்கிறது.

டில்லி டேர்டெவில்ஸ் அணி என்னை மீண்டும் ஏலத்தில் எடுக்கும் என்று நம்புகிறேன்.

நானும், கம்பீரும் தொடக்க ஆட்டக்காரர்களாக நீண்ட நாட்கள் சிறப்பாக செயற்பட்டு இருக்கிறோம். இந்திய அணிக்காக மீண்டும் தொடக்க வீரராக விளையாட முடியும் என்று நம்புகிறேன் என தெரிவித்தார். (க)

## ஆரம்ப கிரிக்கெட்டில் சில தவறு செய்துள்ளேன்

தனது கிரிக்கெட் வாழ்க்கையின் ஆரம்பத்தில் சில தவறுகளை செய்துள்ளதாக இந்திய அணியின் இளம் வீரர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

எனினும் வார்த்தைகளைப் பயன்படுத்துவது தேவையற்ற ஒன்றென தற்போது தாம் உணர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

25 வயதான விராட் கோலி சிறப்பான துடுப்பாட்டம் மூலம் புகழப்படுகின்ற போதிலும், மோதல் சூழ்நிலைகளில் மிகவும் ஆக்ரோஷமாக செயற்படுகின்றமை குறித்து விமர்சிக்கப்பட்டிருந்தார்.

நியூசிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற போட்டியில் பந்து வீச்சாளர் தன்மை ஆத்திரமூட்டும் வகையில் நோக்கியதாகவும் விராட் கோலி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் தாமும் ஆத்திரமூட்டும் வகையில் நோக்கிய போதிலும், வார்த்தை பிரயோகங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் சர்வதேச தரப்படுத்தலில் அவுஸ்திரேலியா அணி முதலிடம்

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் தரப்படுத்தலில் அவுஸ்திரேலய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

நியூசிலாந்து - இந்திய அணிகளுக்கிடையிலான 2-வது ஒருநாள் போட்டியின் முடிவின் பின்னரே அவுஸ்திரேலிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, இந்தத் தொடரை உலகின் முதல் நிலை ஒருநாள் சர்வதேசப் போட்டி அணி என்ற அந்தஸ்தில் ஆரம்பித்தது.

எனினும் முதலாவது போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்திருந்தது.

மறுபுறத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் அவுஸதிரேலிய அணி 3-0 என்ற கணக்கில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தது.

எனினும் இந்திய அணி, தனது முதலிடத்தை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள நியூசிலாந்து அணிக்கெதிரான தொடரின் 2-வது போட்டியில் வெற்றிபெற்றாக வேண்டும் என்ற நிலை காணப்பட்ட போதிலும், இந்திய அணி தோல்வியடைந்திருந்தது.

இதன் காரணமாக அவுஸ்ரேலிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இங்கிலாந்திற்கெதிரான 5 போட்டிகள் கொண்ட தொடரை அவுஸ்ரேலிய அணி 5-0 என்ற கணக்கில் வெற்றி கொள்ளுமாயின், இந்திய அணி நியூசிலாந்திற்கெதிரான தொடரை 3-2 என்ற கணக்கில் வெற்றி கொண்டாலும் அவுஸ்திரேலிய அணியே முதலிடத்தை வகிக்கும். (க)



## ஆஸி - இங்கிலாந்து இன்று பலப்பரீட்சை

ENGLAND CRICKET

CRICKET AUSTRALIA

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 4-வது ஒருநாள் போட்டி இன்று பேர்த் நகரில் ஆரம்பமாகிறது. 5 போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலியா 3 போட்டிகளில் வென்று தொடரை கைப்பற்றிவிட்டது. இதனால் இன்றைய போட்டி சம்பிரதாயபூர்வமான போட்டியாக இருக்கும்.

ஆஸி அணி தனது வெற்றிப் பயணத்தை இன்றைய போட்டியிலும் தொடரும் ஆர்வத்தில் உள்ளது. இதன் காரணமாக இங்கிலாந்து அணி வெற்றிக்காக கடுமையாக போராட வேண்டியிருக்கும்.

ஏற்கெனவே அந்த அணி 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் தோற்று 'வைட்வோஷ்' ஆகி இருந்தது. இதனால் ஒருநாள் போட்டித் தொடரிலும் 'வைட்வோஷ்' ஆகி விடக்கூடாது என்பதற்காக இங்கிலாந்து போராடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## கட்ச் பிடித்த ரசிகருக்கு 52 லட்சம் பணப் பரிசு




இந்திய அணியின் நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் நியூசிலாந்து பீர் கம்பனி, வீரர்கள் அடிக்கும் சிக்ஸர்களை பார்வையாளர்கள் மாடத்தில் இருக்கும் ரசிகர்கள் கட்ச் பிடித்தால் அவர்களுக்கு உடனடியாக அங்கேயே ஒரு லட்சம் நியூசிலாந்து டொலர் (சுமார் ரூ.52 லட்சம்) பரிசு வழங்குவதாக அறிவித்தது. அதிலும் சில கட்டுப்பாடுகள் உள்ளது.



ரசிகர்கள் அந்த நிறுவனத்தின் முத்திரை பெற்ற ஒரஞ் கலர் ரீ-சேர்ட் அணிந்திருக்க வேண்டும். சிக்ஸர் அடிக்கும் பந்தை ஒரு கையாலேயே பிடிக்க வேண்டும் என்பது அந்தக்கட்டுப்பாடு.

கடந்த 22-ம் திகதி ஹமில்ரனில் நடந்த போட்டியில் ஏராளமான ரசிகர்கள் ஒரேஞ் கலர் ரீ-சேர்ட்டுடன் பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்திருந்தனர்.

கொரி அண்டர்சன் அடித்த சிக்ஸர் பந்து பார்வையாளர் மாடத்திற்கு சென்றது. அதை எதிர்பார்த்து காத்திருந்த ஜித்திந்தர் சிங் என்ற இந்திய வம்சாவளி ரசிகர் லாவகமாக தனது வலது கையால் பந்தை பிடித்தார்.

அவருக்கு உடனடியாக பீர் நிறுவனத்தினர் அங்கேயே குட்டி விழா நடத்தி ரூ.52 லட்சம் பரிசை வழங்கினர்.

இதுகுறித்து ஜித்திந்தர் சிங் கூறுகையில், நான் முதலில் சற்று தொலைவில் அமரலாம் என நண்பரிடம் கூறினேன்.


ஆனால் எனது நண்பரோ அந்த இடம் சரிப்பட்டு வராது என்று கூறி தற்போது இருந்த இடத்தில் அமர வைத்தார். வேகமாக வந்த பந்து என்னை தாண்டிச் சென்று விடுமோ என நினைத்தேன்.

ஆனால்கையை உயர்த்திய போது அந்த பந்து என் உள்ளங்கையில் அமர்ந்து விட்டது என சந்தோஷ குரலில் தெரிவித்தார். இந்த பணத்தில் ஒரு புதிய கார்வாங்க உள்ளேன்.

நான் படிப்புக்காக வாங்கிய லோனையும் இதன்மூலம் அடைத்து விடுவேன் என்று தெரிவித்தார். 22 வயதாகும் ஜித்திந்தர் அங்குள்ள கிரிக்கெட் கிளப் அணியில் வீரராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் போராட்டம் நடத்த வேண்டிவரும்

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை நிர்வாகம் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள நிலையில் ஜனாதிபதிக்கும் ஆளுநருக்கும் விசுவாசமாகவே அதிகாரிகள் செயற்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், இதனால் மாகாண நிர்வாகத்தை சிறந்த முறையில் நடத்த முடியாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழினத்திற்கு எதிராகவும் ஜனாதிபதி மற்றும் ஆளுநருக்கு விசுவாசமாகவும் தூக்குக் காவடி எடுக்கும் அதிகாரிகள் யாராயினும் நங்களாகவே ஒதுங்கிக் கொள்ளுங்கள். இல்லாவிடின் அரசிற்கு எதிராக போராட்டங்களை நடத்திய நாம் அதிகாரிகளுக்கு எதிராகவும் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் (சுன்னாகம்) உள்ளூராட்சிவார நிகழ்வுகள் பிரதேச சபை மண்டபத்தில் மேற்படி பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஸ் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் பெருமபாலான உள்ளூராட்சி மன்றங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. இத்தகைய மன்றங்கள் திறம்பட செயற்பட வேண்டுமாயின் அனைவரதும் ஒத்துழைப்புக்களும் பங்களிப்புக்களும் மிக முக்கியமாகும்.

இவ்வாறு எதுவிதமான ஒத்துழைப்புக்களும் இல்லாத நிலைமையிலையே இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்கள் இதுவரை காலமும் செயற்பட்டு வந்தன. அதாவது ஆளுநருடன் இணைந்து அதிகாரிகள் ஆட்சி செய்து வந்திருந்த நிலையில் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருக்கின்ற நிலையிலும் அதே மனப்பாங்குடனே அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் உள்ளூராட்சிமன்றங்களை சிறந்த முறையில் செயற்படுத்த முடியாதிருந்தது. இந்நிலையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. ஆனால் இதன் பின்னரும் மாகாண சபையினையும் செயற்படுத்த முடியாத நிலையே இருக்கின்றது. அதாவது உள்ளூராட்சிமன்றங்களின்நிலையே மாகாண சபைக்கும் [illegible] மாதங்களில் வந்[illegible] குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக பிரதம செயலாளரை நியமிப்பது உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்களை நியமிப்பதென அனைத்தும் சட்டதிட்டத்தின் பிரகாரம் ஒத்துழைப்புடன் செயயலாம் என்று கூறிய ஜனாதிபதி தற்போது முடியாதென்று கூறிவருகின்றார். இது தான் இன்றுள்ள நிலைமையாகும்.

மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்று தேர்தலின் போதும் நாம்கூறினோம். அதனை தற்போதும் கூறுகின்றோம். இந்நிலையில் மாகாண சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதற்கமைய மாகாண சபை நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றோம். இந்நிலையில் ஜனாதிபதி இதற்கு மாறாகச் செயற்பட்டு வருகின்றார். இவ்வாறு ஜனாதிபதி ஒப்புதல் கொடுக்கும் வரை இங்கிருக்கின்ற நிர்வாகம் முடங்கிப் போகும் சூழல் காணப்படுகிறது.

இவ்வாறு தொடர்ந்தும் ஆளுநருக்கு விசுவாசமாகவும் மாகாண அரசிற்கு ஒத்துழைக்காமலும் தொடர்ந்தும் செயற்பட முடியாவிட்டால் அல்லது மககளுக்கு சேவை செய்ய முடியாது அதிகாரிகள் இருப்பார்களாயின் தாங்களாகவே ஒதுங்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் அரசிற்கு எதிராக போராட்டங்களை நடத்தியது போன்று அதிகாரிகளுக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடுமென்றும் எச்சரித்துள்ளார். ஆகவே தங்களைத்திருத்திக் கொண்டு மாகாண சபைக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும் [illegible] (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்துக்கு முரணாக...

யாழ்.வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலவித பணிகளுக்கிடையில் இந்த விழாவில் நான் கலந்து கொள்ள காரணமுண்டு நீங்கள் உள்ளூராட்சி வாரம் கொண்டாடும் போது உள்ளூராட்சி அமைச்சர் என்ற முறையில் இவற்றில் கலந்து கொள்வது எனது கடமை என்பது ஒரு புறமிருக்க தேர்தலின் போது சுன்னாகம் வந்து பேசியதன் பின்னர் உங்கள் முன்னிலையில் என்னால் வரமுடியாது போய்விட்டது என்பதால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கவே வந்துள்ளேன்.

எமக்கு அமோகமான ஆதரவு அளித்து இந்தப் பதவியில் இருத்தியுள்ளீர்கள் நன்றி. ஆனால் எம் அதிகாரங்களைப் பாவிக்க இடம் தராத ஒரு நிலையே இன்னமும் காணப்படுகின்றது. எமக்கு அதிகாரங்கள் இல்லை என்று நாம் கூறுவதால் எமக்கு ஏதும் நன்மைகள் வந்து விடமாட்டா. கிடைத்திருக்கும் அதிகாரங்களையும் நடைமுறையும் கணக்கில் எடுத்து கொண்டு நாம் முடியுமான மட்டும் முன்னேறவே திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

இவ்வருடம் மார்ச் மாதத்தில் சர்வதேச ரீதியாகக் கேள்விக்குட்படுத்தப்பட போகும் இலங்கை அரசாங்கம் அடுத்த தேர்தலை மட்டும் மனதில் எடுத்து பிழையான வழியில் போய்க் கொண்டிருக்கின்றது. எம்மைப் பொறுத்த வரை சட்டத்திற்குப் புறம்பான வழியில் அரசாங்கம் நடக்க முனைந்துள்ளது என்பதே எமது கருத்து.

1987-ம் ஆண்டின் 42-வது இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 31-ன் கீழ் மாகாணசபையொன்றின் பிரதம செயலாளரை அம்மாகாணத்தின் முதலமைச்சரின் இசைவுடனேயே ஜனாதிபதி நியமிக்க வேண்டும். அதை விடுத்து அரசியல் காரணங்களுக்காகத் தனது கடமையை உதாசீனப்படுத்தி வருகின்றது.

அரசாங்கம் தமக்கிசைவான தனது கைப்பொம்மையாக முன்னர் கடமையாற்றிக் கொண்டிருந்த தனது கடமைகளைச் செவ்வனே உரிய முறையில் செய்ய முடியாத ஒருவரைப் பதவியில் இருத்தி வட மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்களில் மண்ணை அள்ளித் தூவ நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது அரசாங்கம்.

கேட்பதைத் தருவேன் இன்றிரவே உரிய நடவடிக்கைகள் எடுப்பேன் என்று இம்மாதம் 2-ந் திகதி வாக்களித்த ஜனாதிபதி நொண்டிச் சாட்டுக்களைக் கூறி தற்போது வேண்டாம். காலங் கனியட்டும் என்று கூறுவதன் நோக்கம் அரசியல் காரணங்களாக இல்லாமல் வேறு என்ன காரணமாக இருக்கும் என்பதை மக்களே தீர்மானிக்கட்டும்.

ஆன்றால் ஆகமொத்தம் ஜனாதிபதி தாம் விரித்த வலைக்குள் தானே அகப்பட்டுத் திண்டாடுகின்றார் என்பது புரிகின்றது. முதலில் வட மாகாணத் தேர்தலை இவ்வருடம் நடத்துவேன் என்று 2009-ம் ஆண்டில் கூறி அதையே 2010,2011,2012-ல் கூறி வந்தார். ஆனால் நடத்தவில்லை 2013-லும் அவ்வாறே கூறியிருப்பினும் நடத்தும் எண்ணம் அவருக்கு இல்லாது இருந்தது. இந்தியாவின் மிகக் கடினமான நெருக்குதலே அவரைத் தேர்தலை நடத்த வைத்தது. அப்போது அவரின் எண்ணம் எப்படியாவது இராணுவத்தின் உதவியுடன் வட மாகாணத் தேர்தலை வென்றுவிடலாம் என்றே இருந்தது. அதற்காகப் பல பிரயத்தனங்களில் இறங்கியும் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை அரசாங்கத்திற்கு எதிராகவே வெளிக்காட்டினார்கள். இதை ஜனாதிபதியால் பொறுக்க முடியவில்லை சொல்வது ஒன்று செய்வது இன்னொன்றாகத் தனது பழகிய முறையில் நடக்கத் தொடங்கினார்.

அதாவது தெற்கில் ஒரு குறிப்பிட்ட ஆற்றின் அடுத்த புறத்தில் இருப்பவர்களை நம்பக் கூடாது என்று சிங்கள மக்களே கூறுவர். எமது ஜனாதிபதி ஆற்றின் அடுத்த பக்கத்தில் பிறந்து வளர்ந்தவர் எனவும் தெரிவித்தார்.

(மற்றுமொரு செய்தி உள்ளே) (எ-6)

## ஓம் நமசிவாய...

11 மணிக்கு வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கே.கே.எஸ்.வீதி வழியாக கரிமலை நகுலேஸ்வரம் சிவனாலயத்தைச் சென்றடையும்.

ஓம் நமசிவாய பிரார்த்தனை வாகனப் பவனியில் அனைத்து இந்து அமைப்புக்களையும் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை ஓம் நமசிவாய பிரார்த்தனைப் பவனிக்கு வடமாகாணத்திலுள்ள அனைத்து இந்து ஆலயங்களும் இந்து அமைப்புகளும் தமது ஆதரவை வழங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)


**ஆதிரையான் கல்வி நிலையம்**
**திக்கம் - பருத்தித்துறை**

O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கான ஆங்கில வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. விரும்பியவர்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(5409) - நிர்வாகி -

**micro tec**
Computer wholesaler
கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற...
Branded கணனிகள், மடிக் கணனிகள் மற்றும் அனைத்து கணனி பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
Computer repairing are available here.
For whole sale... Laptop: Rs. 15,000 - Rs. 40,000
15"-Rs.3,600/- 17"-Rs.4,200/- 19"-Rs.5,200/-
PD, Piv, D.core, C2D, i3, and i5. computers Rs. 6,000 - Rs. 40,000
0774825446 / 0779120842
No.170, Palaly Road, Kondavil East, Jaffna.

**VACANCYES**
நெல்லியடியில் Job...! Job....! Job....!
0776219536, 0771281373
நீங்கள் O/L பயின்றவரா? இவ் இலக்கங்களுக்கு அழைத்து உங்கள் .பதிவுகளை உடன் பதிவு செய்க! 20 பேருக்கு முன்னுரிமை. நிர்வாக அதிகாரி செயல்திட்ட அதிகாரி, அலுவலக உதவியாளர், மேற்பார்வையாளர். அனுபவம் இல்லையா?
தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
(5415)


**Learn French the French Way**
பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே.
திருமணம் மூலம் France செல்பவர்களுக்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது **Certificates** மட்டுமே Embassy இல் கருத்திற்கொள்ளப்படுகிறது.
புதிய வகுப்புகள் விரைவில் 021 222 8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)


## மேலும் ஒரு எலும்பு...

செல்வதற்காக பொதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த புதைகுழியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூட்டின் பாகங்கள் பரிசோதனைகளுக்காக 4 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

நேற்று வியாழக்கிழமை வரை மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளின் தொகை 44 ஆக உயர்வடைந்துள்ளது. (எ-11)

## சர்வாதிகார நோக்கி...

சபைத் தவிசாளர் தி.பிரகாஸ் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற போது நிகழ்வில் பிரதம விருந்தினர்களில் ஒருவராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் மாகாண சபையின் அதிகாரங்களும் முற்றுமுழுதாக வழங்கப்பட வேண்டும். ஆனாலும் இதனை வழங்குவதற்கு ஆட்சியாளர்கள் தயாரில்லை. மாறாக அத்தகைய அதிகாரங்களை இராணுவத்திடமே வழங்குவதையே இன்றைய ஆட்சியாளர்கள் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

எமது மக்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக வாக்களிக்கவில்லை. தமது உரிமையை வென்றெடுப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பீற்கு வாக்களித்தனர். எமது மண்ணில் எங்களை நாங்களே ஆளவும் வாழவுமே இங்குள்ள மக்கள் விரும்புகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலானது வெறுமனே அனந்திக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலல்ல. மாறாக ஜனநாயகத்துக்கே விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே அமைகின்றது.

இவ்வாறு அரசாங்கம் மனிதாபிமானமற்ற வகையில் செயற்பட்டு வருகிறது. இதனால் நாம் அரசிற்கு எதிராக செயற்பட வேண்டிய நிலை இருக்கின்றது. மக்களுடைய கருத்துக்களை எண்ணங்களை அறிந்து செயற்பட வேண்டும். அத்தோடு ஜனநாயக விழுமியங்களுக்கமைய நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## கிழக்கில் சில குழுக்க...

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களைவிட சற்று வித்தியாசமானது. இம்மாகாணத்தில் பல்லின மக்களும் வாழ்கின்றார்கள். பல மார்க்கத்தையும் மொழிகளையும் உள்ளடக்கிய மாகாணமாக காணப்படுகின்றது. இன்று மக்கள் ஒன்றாக வாழ்வதையிட்டு நான் சந்தோஷமடைகின்றேன்.

எனது கருத்தை கேட்டு அபிவிருத்தி வேலைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு ஆளுநர், முதலமைச்சர் ஏனையோர்கள் ஒன்றாக இணைந்து செயற்பட்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 30 வருடங்களில் இந்த நாட்டில் என்ன நடந்தது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

தற்போதுள்ள சமாதான சூழலை தொடர்ந்தும் நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பு அவசியம் என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்தின் பின் நான்கு வருட குறுகிய காலத்தினுள் வடமாகாணத்தில் மூன்று இலட்சம் மக்களை மீளக்குடியமர்த்தி அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றியதுடன், தடுப்புக் காவலில் இருந்த ஐயாயிரம் பேருக்கு புனர்வாழ்வளிப்பதற்கு சகல வேலைகளையும் இந்த அரசாங்கம் முன்னெடுத்தது.

அத்துடன் அபிவிருத்தி வேலைகளையும் குறுகிய காலத்தினுள் செய்து முடித்ததை காணக்கூடியதாக இருந்தது.

யுத்தம் நடைபெற்ற காலங்களில் சில குழுக்களுக்கு நாங்கள் ஆயுதங்களை வழங்கியிருந்தோம். யுத்தம் நிறைவடைந்த பின்னர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களிடமிருந்த ஆயுதங்களை மீளப் பெற்றதன் காரணமாக எங்களால் சமாதானத்தை நிலைநாட்ட முடிந்தது.

இந்த நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் போன்ற பல்லின மக்களும் வாழ்கின்றார்கள். அதேபோல் பௌத்தமதம், இந்து மதம், இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதம் போன்ற பல மதங்களும் இங்கு இருக்கின்றது. ஆனால் இவர்கள் அனைவரும் இலங்கையர்கள் ஆவார்கள். மகிந்த சிந்தனையின்படி இங்கு வாழும் அனைத்து மக்களும் சமமாகவும் சுபீட்சமாகவும் வாழவேண்டும் என்பதில் எமது ஜனாதிபதி நிலையான கொள்கையை உடையவராக இருக்கின்றார் என்றார். (எ-11)

## வட மாகாண சபை...

தரப்பைச்சேர்ந்தவரை, வடமாகாண சபை அமர்வுகளில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு மன்றில் கோரி நின்றார்.

இதற்கு பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. "பொலிஸார் பாதுகாப்பு வழங்கும் பட்சத்தில் கமலேந்திரனை வடமாகாண சபைக்கு அழைத்துச் சென்று வருவோம்" என சிறைச்சாலை பொறுப்பதிகாரி இதன்போது மன்றில் தெரிவித்தார்.

இதற்கமைய கமலேந்திரனை வடமாகாண சபை அமர்வுகளில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்குவதாகவும் அத்துடன், யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொலிஸார் இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தினையும் செய்வார்கள் என நீதவான் தெரிவித்தார்.

வழக்கின் மூன்றாவது சந்தேக நபரான இளைஞன் சார்பாக எந்தச் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷியன் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி புங்குடுதீவில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பில் வடமாகாண சபை எதிர்கட்சி உறுப்பினர் கமலேந்திரனை டிசம்பர் 3 ஆம் திகதி கொழும்பில் வைத்து பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்ததுடன், றெக்ஷியனின் மனைவி மற்றும் மற்றுமொரு இளைஞன் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால கைது செய்யபட்டார். (எ-4,11)

## சர்வதேச விசாரணை...

1. தமிழ்த் தேசியத்தின் மீது நடந்ததும் நடந்து கொண்டு இருப்பதும் இலங்கை நாட்டினால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுன்ற திட்டமிட்ட இன அழிப்பு என்பதனை அனைத்துலக சமூகத்திற்கும் நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.

2. இலங்கை அரசில் எமக்கு எள்ளளவு நம்பிக்கையும் இல்லை என்பதுடன் எந்த விதமான உள்நாட்டு பொறிமுறைகளும் எமக்கு நீதி அல்லது அரசியல் தீர்வை ஒரு போதும் கொடுக்குமென நம்பவே இல்லை. ஆகையால் அனைத்து உள்நாட்டுப் பொறிமுறைகளையும் நாம அடியோடு ஆணித்தரமாக நிராகரிக்கின்றோம்.

3. எமது மக்களுக்கெதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மானிடத்திற்கெதிரான குற்றங்கள், இன அழிப்பு ஆகியவற்றை விசாரணை செய்வதற்காக பக்கச் சார்பற்ற பன்னாட்டு விசாரணையை ஐக்கிய நாடுகள் சபையின் துணையுடன் உருவாக்குவதற்கு அனைத்துலகச் சமூகத்தினை நாம் வேண்டுகின்றோம்.

ஆகிய மூன்றுபிரேரணைகளே முன்மொழியப்படவுள்ளன. (எ-4)

## லலித் வீரதுங்க...

விஜயத்தை மேற்கொள்ள உள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் அமெரிக்க அரசாங்கத் தரப்பினருக்கும், செனட் சபை உறுப்பினர்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ள நிலையில் இந்த விஜயம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் நல்லிணக்க முனைப்புக்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என அமெரிக்கா குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.